# தமிழக மக்கள் இறையாண்மை

தி.பி 2054 கன்னி (புரட்டாசி) 2023 செப்டம்பர் அக்டோபர்
தனிச்சுற்றுக்கு மட்டும்
மலர் 1 இதழ் 7
நன்கொடை ரூ 20



## அகண்ட பாரத கனவுக்காக எரியும் மணிப்பூர்










## ஜக்கம்மாக்களும் மாதவிடாயும்







## சாதி சிக்கலால் சாகும் காதலர்கள்...



அழகாக பார்ப்போம் எல்லோரும் அழகு!
அன்பாக நினைப்போம்!
எல்லோருக்கும் அன்பு உண்டு!
பொறுப்பாக சிறப்பாக பணியாற்றி மகிழ்வோம்!
பொதுவாழ்வு உருவாக்க குழுவாக இணைவோம்!
நிலை மாறினாலும்!
நிலம் மாறினாலும்!
எல்லோருக்கும் எதிர்காலம் ஒன்றாக வேண்டும்!
( அழகாக பார்ப்போம்! எல்லோரும் அழகு!

பற் பல மொழிகள் பயில்வோம்!
பேசுவோம்!
பாடுவோம்!
கதை கதைப்போம்! நன்கு
கதை கதைப்போம்!
பல்திசை பயணங்கள் செல்வோம்!
தேடுவோம்!
திரட்டுவோம்!
திறன் வளர்ப்போம்! நல்ல
திறன் வளர்ப்போம்!
ஆய்வுகள் செய்வோம்!
அறிவியல் வளர்ப்போம்!
அடக்கத்தை பிடித்து உயர்வாழ்வை படைப்போம்!
( அழகாக பார்ப்போம்! எல்லோரும் அழகு!

பன்மொழி மனிதரை காண்போம்!
பேசுவோம்!
பழகுவோம்!
கதை கதைப்போம்! நன்கு
கதை கதைப்போம்!
பல்வகை கலைகளை பயில்வோம்!
உண்போம்!
உடுத்துவோம்!
உறவு கொள்வோம் இரத்த
உறவு கொள்வோம்
இருப்பதை கொடுத்து
தருவதைப் பெறுவோம்!
சமத்துவம் பிடித்து சமதர்மம் படைப்போம்!
( அழகாக பார்ப்போம்! எல்லோரும் அழகு!






மலர் 1 இதழ் 7

சாதி
ஒழிப்போம்!
தமிழரை
இணைப்போம்!
தமிழ்த் தேச
இறையாண்மை
மீட்போம்!

ஆசிரியர்
திருமொழி

ஆசிரியர் குழு
பாரி
ரூபன்
முத்துமுருகன்
செந்தில்

சட்ட ஆலோசனை
வழக்கறிஞர் இரா.வைத்தீஸ்வரன்

தொடர்பு முகவரி
243/1, பெரியார் நகர்,
காட்டு நாவல்,
கந்தர்வகோட்டை அஞ்சல்,
புதுக்கோட்டை மாவட்டம்.
அ .கு .எண் 613 301

தொடர்பு எண்கள் :
76674 43935
99431 14128

தனிச்சுற்றுக்கு மட்டும் நன்கொடை ரூ20/-

# பார்ப்பன சதி திட்டத்தில் சாதி இயக்கங்கள்

பார்ப்பனக் கூட்டமும் சாதி ஆதிக்கச் சக்திகளும் சாதிகளைப் பாதுகாக்கும் திட்டத்தில் தொடர்ந்து செயல்பட்டு கொண்டிருக்கின்றன. இது அவர்களின் நீண்ட காலத் திட்டம் என்ற போதும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பார்ப்பனக் கூட்டமும், சாதி ஆதிக்கச் சக்திகளும் சாதி மோதல்களை திட்டமிட்டு உண்டாக்குவது என முடிவு செய்து செயல்படுத்தத் தொடங்கி விட்டனர். மாணவர்கள் உட்பட அனைத்து மக்களிடமும் சாதி அடிப்படையில் கைகளில் கயிறு கட்டும் பழக்கத்தை தொடங்கிவிட்டனர்

இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் கூட கயிறுகளுடன் தான் அலைகின்றனர். இருந்தும் சென்னை மற்றும் கோவை ஆகிய பகுதிகளில் சாதிக் கலப்பு(சாதி மறுப்பு) திருமணங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. நடைபெறும் திருமணங்களில் ஒரு சதவீதம் கூட சாதியை மறுக்கும் திருமணங்கள் அல்ல. அதேசமயம் பெரும்பாலான திருமணங்கள் ஆணாதிக்க நிலையில்/ சாதி ஆதிக்க நிலையில் ஏதோ ஒரு சாதியாக மாறிவிடுகிறது. குழந்தைகள் தாய் அல்லது தந்தையின் சாதி வழியில் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் சிலர் சாதி மற்றும் மதத்தை மறுத்து பள்ளிகளில் சேர்க்கிறார்கள். இதனால் இவர்கள் இட ஒதுகீட்டில் இடமில்லாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அல்லது சாதி ஆதிக்கச் சக்திகளின் பிரிவில்

இணைக்கப்பட்டுவிடுகின்றனர்.

சாதி மறுப்பு திருமணம் செய்த பார்ப்பன சக்திகளும், ஆதிக்க நிலையில் உள்ள சாதிகளும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான இட ஒதிக்கீட்டை பெற அனுமதிகக்கூடாது. அதற்கான சரியான வழி முறைகள் கண்டறியப்பட வேண்டும். சாதிய சிக்கல் தொடர்ந்து நீடித்து இருப்பதற்கு பார்ப்பனிய கொள்கைதான் அடிப்படை.

இந்திய அளவில் நடைபெறும் சாதிப் பிரச்சனைகளில் பார்ப்பனியத்தின் நேரடிப் பங்கு இருப்பதில்லை. தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டு பார்த்தால் பள்ளருக்கும் தேவருக்குமான பிரச்சனைகளாகவும், பறையருக்கும் வன்னியருக்குமான பிரச்சனைகளாகவும், அருந்ததியர்களுக்கும் கவுண்டர்களுக்கு மான பிரச்சனைகளாகவும், மோதல்கள் நடைபெறுகின்றன. எனினும் சாதி ஆதிக்க சக்திகளுக்குள்ளேயும் மோதல்கள் சிறிய அளவில் நடந்து கொண்டிருக்கின்றன. அதேசமயம் ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு எதிராக சாதி ஆதிக்கச்சக்திகள் ஒன்று சேர்ந்து கொள்கின்றன. பார்ப்பர்னகளைப் பொறுத்த அளவில் பார்ப்பனர்கள் பார்ப்பன அல்லாதவர்கள் தான்.

இந்தப்போக்கினால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையேபகை நீடிக்கச் செய்கின்றன. எனினும் சாதிகளின் தோற்றத்திற்கு காரணமாகவும் ஆதிக்கச் சக்தியாக தொடர்ந்து முன்னிலை பெறும் பார்ப்பனியம் இன்றுவரை தன்னை வளர்த்துக் கொண்டேவருகிறது. பெரியாரும், அம்பேத்காரும் பார்ப்பனியத்திற்கு எதிராக, பார்ப்பனியம்தான் பிரச்சனைக்கு காரணம் என்று மக்களிடம் எடுத்துச் சென்றார்கள். ஆனாலும் சாதி ஆதிக்கம் முற்றாக ஒழிந்துவிடவில்லை. அது தன்னை சூழலுக்கு ஏற்ப தகவமைத்து கொண்டே வளர்கிறது. ஆணாதிக்கமும், பெண்ணடிமைத்தனமும், சாதி ஆதிக்கமும் பார்ப்பனியத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும். ஒடுக்கப்பட்ட சாதிகளில் இருந்தும், பிற்படுத்தப்பட்ட சாதிகளில் இருந்தும் பார்ப்பன சாதிகளில் இருந்தும் பார்ப்பனத்திற்கு அடுத்த நிலையில் இருக்கும் ஆதிக்க சாதிகளிலிருந்தும் தங்கள் சொந்த சாதிகளிலிருந்து கணவன் மனைவியைத் தேர்வு செய்யும் திருமண தகவல் மையங்கள் ஏராளமாக தொடங்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

தங்கள் ஊருக்கு அருகில் அல்லது நகரத்துக்குள் தன் சாதி மணமக்களை தேடி திருமணம் செய்துகொண்டிருந்த சாதிகள் மாவட்ட, மாநில எல்லைக்குள் தற்போது இந்தியாவிற்குள்ளும், ஏன்? உலக அளவிலும் தங்களது சாதியைத் தேடிக்கொண்டிருக்கின்றன. தொழில் வளர்ச்சி, சாதியை உலக அளவில் இணைக்கிறது. தொழில் வளர்ச்சி சாதியை ஒழித்துவிடும் என்று கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு சக்திகள் பாடம் நடத்தி வந்தனர். ஆனால் சாதி ஒழிப்புப் போராட்டமும் நிலப்பிரபுத்துவ ஒழிப்பும், முதலாளிய ஒழிப்பும் இல்லாமல் சாதியை ஒழித்துவிட முடியாது.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கொண்டுவரும் சாதி மறுப்புத் தீர்மானங்கள், சாதிமறுப்புக் கொள்கைகள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. சாதி மறுப்பு திருமண முறைகளால் மட்டும் சாதியை ஒழித்துவிட முடியாது என்றபோதிலும் சாதி ஒழிப்புக்கு கலப்புத் திருமணங்கள் துணை செய்யும். புரட்சிகர இயங்கங்களில் முதன்மையான, முக்கியத்துவமான கொள்கையாக சாதி மறுப்பு இருக்க வேண்டும். நிலவுடைமை, ஏகாதிபத்திய, முதலாளித்துவத்திற்கு எதிராக சோசலிசக் கொள்கை பார்ப்பன ஒழிப்பு, சாதி ஒழிப்பு நடைமுறைகளுடன் இணைந்தே முன் எடுக்க வேண்டும். ●

# மாரிமுத்து - மகாலட்சுமி
# ஆணவப் படுகொலை

**தமிழக அரசுக்கு தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் கோரிக்கை.**

10/08/2023. **– தோழர் தியாகு**

சென்ற 2023 ஆகஸ்டு 5 சனிக் கிழமை காலை 7 மணியளவில் தேனி மாவட்டம் பெரியகுளம் கும்பக்கரை சாலையில் ஒரு மாந்தோப்பில் இளைஞர் ஒருவரும் இளம்பெண் ஒருவரும் தூக்கில் தொங்கும் காட்சியை அவ்வழியாகச் சென்ற பொதுமக்கள் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளர்கள். அந்த இளைஞர் மாரிமுத்து, இளம்பெண் மகாலட்சுமி. அவர்கள் பெரியகுளம் காந்தி நகரைச் சேர்ந்த பறையர் சாதி மாரிமுத்துவும், கள்ளர் சாதி மகாலட்சுமியும் காதலித்து வந்துள்ளார்கள்.

மகாலட்சுமிக்கு 18வயது நிறைவடையாத நிலையில் அவர்கள் உடனடியாக மணம் புரிந்து கொள்ளச் சட்டம் தடையாக இருந்துள்ளது. மகாலட்சுமி 'மைனர்' என்பதைச் சாக்கிட்டு அந்தப் பெண்ணின் குடும்பத்தினர் மாரிமுத்து மகாலட்சுமி காதல் நிறைவேற விடாமல் தடுத்து வந்துள்ளனர். ஆனால் உண்மையான காரணம் அவர்களின் சாதிவெறிதானே தவிர அவரது வயதல்ல என்பதற்கு அதே மகாலட்சுமியை இப்போதே தங்கள் சாதிக்குள் கட்டிக்கொடுக்க அவர்கள் செய்துள்ள முயற்சியே சான்றாக உள்ளது. கடந்த காலத்தில் மகாலட்சுமியின் பெற்றோர் கொடுத்த முறைப்பாடுகளின் பேரில் மாரிமுத்து இரண்டு முறை சிறைப்படுத்தப்பட்டுள்ளார். மகாலட்சுமியின் குறைவயதினால் ஏற்படும் சட்டச் சிக்கலைப் புரிந்து கொண்ட மாரிமுத்துவும் மகாலட்சுமியும் திருமணத்தைத் தள்ளிப் போட தங்களுக்குள் முடிவு செய்திருந்ததாகத் தெரிகிறது. 18 வயது நிறைவடைந்தவுடன் மாரிமுத்துவைத்தான் மணம் புரிவேன் என்று உறுதியாக இருந்த மகாலட்சுமி தன் பெற்றோரிடமும் உறவினர்களிடமும் காவல் துறையிடமும் நீதித் துறையிடமும் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத மகலட்சுமியின் பெற்றோர் அவரை அடித்துத் துன்புறுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள், இதற்குப் பெரியகுளம் காவல் துறையும் உடந்தை எனத் தெரிகிறது. அண்மையில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் தலித் மக்களைத் தாக்கியும், முருகன் மார்பில் பச்சை குத்தபட்டிருந்த அம்பேத்கரை உதைத்தும் தம் சாதி வெறியைக் காட்டிக் கொண்ட பெரியகுளம் காவல் துறையினர் அதே சாதி வெறியுடன் மகாலட்சுமியின் மனத்தைக் கரைக்கவும் மாரிமுத்துவை மிரட்டிப் பணிய வைக்கவுமே முயன்றுள்ளார்கள்.

மகாலட்சுமி மாரிமுத்து இருவரையுமே கழுத்தறுத்துப் போட்டு விடுவோம் என்று மகாலட்சுமியின் தந்தை சம்பத்தும், அக்காள் கணவர் பாண்டியும் வெளிப்படையாக மிரட்டியுள்ளார்கள். நேற்று முன்தினம் கூட மகாலட்சுமி தன்னைப் பெற்றோர் அடித்துத் துன்புறுத்துவதாகவும், தனக்கு இன்னும் சில மாதங்களில் 18 வயது நிறைவடைந்து விடும் என்றும், அதுவரை தன்னைக் காப்பகத்தில் சேர்த்துவிடுமாறும் பெரியகுளம் காவல் நிலையக் காவலர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.



மாரிமுத்துவும் மகாலட்சுமியும் சடலமாகத் தொங்கியதன் பின்னணி இதுதான். ஏறி நிற்க எவ்வித ஏந்தும் இல்லாத காட்டுப் பகுதியில் உயரமான மாமரக் கிளையிலிருந்து இருவரின் சடலங்களும் தரைதட்டியபடி தொங்கிக்கொண்டு இருந்தன. செய்தியறிந்து ஓடிவந்து பார்த்த ஊர்மக்கள் எவரும் இதைத் தற்கொலை என்று நம்பவிலை. ஆனால் பெரியகுளம்

காவல் துறை எவ்வித விசாரணை யும் இல்லாமல் தற்கொலை தான் என்று முடிவுகட்டி மக்களையும் அவ்வாறே ஏற்கச் செய்ய முயன்று வருகிறது. சாதி வெறியுடன் தலித் மக்களை இழிவாகப் பேசுவதில் பேர்போன பெரியகுளம் காவல்நிலையப் பொறுப்பதிகாரி ஆய்வாளர் மீனாட்சி இவ்வழக்கிலும் சாதிய வன்மத்துடன் செயல்பட்டுள்ளார். மாரிமுத்துவும் மகாலட்சுமியும் பிணமாகத் தொங்கிய காட்சியை மக்கள் கைப்பேசியில் படம் பிடித்து விடாமல் தடுத்து, மக்களை இழிசொற்களால் வசைபாடியும் மிரட்டியும் வலுக்கட்டாயமாக அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளார்.

மாரிமுத்துவின் தாயார் மாலையம்மாள் காவல்துறையிடம் அளித்துள்ள முறைப்பாட்டில், பறையர் சாதியைச் சேர்ந்த தன் மகன் மாரிமுத்து கள்ளர் சாதியைச் சேர்ந்த மகாலட்சுமியைக் காதலித்ததால், மகாலட்சுமியின் குடும்பத்தார் பலமுறை சண்டையிட்டு சச்சரவுகளில் ஈடுபட்டுள்ளதாகக் குறிபிட்டுள்ளார். மகாலட்சுமியின் தந்தை சம்பத்தையும் மகாலட்சுமியின் அக்காள் கணவர் பாண்டியையும் குறிப்பிட்டுப் புகார் அளித்துள்ளார். இருந்த போதிலும் பெரியகுளம் காவல்துறையினர் பட்டியல்சாதி பட்டியல்பழங்குடி வன்கொடுமை(தடுப்பு) சட்டத்தின் கீழ் வழக்குப்பதியாமல் குற்ற நடைமுறைச் சட்டத்தின் கீழ் ‘சந்தேக மரணம்’ என்றுதான் வழக்குப் பதிவு செய்துள்ளார்கள். சடலங்கள் காணப்பட்ட இடத்தில் சட்டப்படியான மரண விசாரணை **(INQUEST)** கூட செய்யாமல் காவல்துறையினர் இருவரின் உடல்களையும் எடுத்துச் சென்று க.விலக்கு மருத்துவமனையில் சடலக் கூறாய்வு செய்வித்துள்ளனர். அதற்குப் பின்னரும் கூட மகாலட்சுமியின் உடலைப் பெற அவர் குடும்பத்தினர் வரவில்லை எனத் தெரிகிறது. அந்நிலையிலும் காவல் துறையினர் மகாலட்சுமியின் சடலத்தை அவசர அவசரமாக அனுப்பி எரிக்கச் செய்திருப்பதாகத் தெரிகிறது. மாரிமுத்துவின் பெற்றோரும் அக்கம் பக்கத்தினரும் மகாலட்சுமியின் பெற்றோர்தாம் மாரிமுத்துவையும் மகாலட்சுமியையும் கொலை செய்திருக்க வேண்டும் என்று உறுதியாகக் குற்றம் சாட்டுகிறார்கள். எஸ்சி/எஸ்டி வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொலை வழக்குப் பதிவு செய்யும் வரை, மாரிமுத்துவின் உடலை வாங்க மறுத்து, மாரிமுத்துவின் பெற்றோரும் முற்போக்கு இயக்கங்களும் போராடி வருகின்றன.

மகாலட்சுமி ‘மைனர்’
என்பதைச் சாக்கிட்டு
அந்தப் பெண்ணின் குடும்பத்தினர்
மாரிமுத்துமகாலட்சுமி காதல்
நிறைவேற விடாமல்
தடுத்து வந்துள்ளனர்.
ஆனால்
உண்மையான காரணம்
அவர்களின் சாதிவெறிதானே
தவிர அவரது வயதல்ல

மாரிமுத்து மகாலட்சுமி இருவரையும் மகாலட்சுமியின் தந்தை, தாய்மாமன் உள்ளிட்டவர்கள் சதிசெய்து கூலிக்கொலை



யாட்களைக் கொண்டு கொலை செய்து விட்டதாகவும், கொலைக் குற்றவாளிகளைக் காப்பாற்றவே பெரியகுளம் காவல் ஆய்வாளர் மீனாட்சியும் தேனி மாவட்டக் காவல் துறையினரும் முயல்வதாகவும் மக்கள் நம்புவதில் நியாயம் இருப்பதாகக் கருதுகிறேன். இந்த வழக்கில் உண்மையைக் கண்டறியவும் குற்றவாளிகளைக் கூண்டிலேற்றவும் பட்டியல் சாதி பட்டியல் பழங்குடி வன்கொடுமை (தடுப்பு) சட்டத்தின் படி வழக்குப் பதிவு செய்யவும் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கும் படியும் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பெரியகுளத்தில் நீதிக்கான போரட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடனும் முற்போக்கு இயக்கங்களுடனும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் தோழமை கொள்கிறது. ●




# மாநிலங்களும் ஒன்றியமும் 5

- முத்து முருகன்

தமிழ் நாட்டின் அரசியலில் நடந்து கொண்டுள்ள ஆளுநரின் செயல்பாடுகள் ஒரு மாநிலத்தின் (தேசிய இனத்தின்) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் ஆட்சி அதிகாரத்தை கேலிக்குள்ளாக்கின்றன. ஒன்றிய அரசின் பிரதிநிதியாக இந்திய ஒன்றிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆளுநர் இடம் பெற்றுள்ளதே இதற்குக் காரணம். டெல்லி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசுக்கு எந்தவித அதிகாரமில்லா நிலைக்கு ஒன்றிய மக்களவை, மாநிலங்கள் அவை (இராஜிய சபா) என இரண்டின் பெரும்பான்மை உறுதிசெய்துள்ளது.




இந்திய ஒன்றியம் பல மாநிலங்களின் (தேசிய இனங்கள்) கூட்டமைப்பு என்பதை பன்மைத் தன்மை என்று சுருக்கிவிட்டனர். அரசியல் அமைப்பு இரண்டு சட்டம் நிறைவேற்றும் அமைப்புகளைக் கொண்டுள்ளது.

1. அனைத்து மாநிலங்களுக்குமான (தேசிய இனங்களுக்குமான) இந்திய ஒன்றியத்தின் நாடாளுமன்ற இரு அவைகள்.

2. ஒவ்வொரு மாநிலத்திற்குமான (தேசிய இனத்திற்கான) **STATE LEGISLATIVE ASSEMBLY** சட்ட மன்றம்

இதுவே இந்திய ஒன்றிய அரசியலமைப்பின் அடிப்படை கோட்பாடு என்பதை மறந்து ஒரு மாநில சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மசோதாவிற்கு கையெழுத்திட மாட்டேன் என்பதும், மாநில நிருவாகத்திற்குள் ஆளுநரின் தலயீடும் இருப்பதற்கு காரணமான இந்திய அரசியல் அமைப்பு விதிகளை நீக்கம் செய்வதே மாநிலங்களின் (தேசிய இனங்களின்) மக்களுக்கு அவர்களது இறையாண்மையை உறுதி செய்வதாகும். மேலும் உண்மையான உறுதியான கூட்டாச்சிக்கு உதவும். தமிழ் நாட்டின் அரசியல் நடவடிக்கைக்கும் ஒன்றிய அரசின் அரசியல் நடவடிக்கைக்கும் அடிப்படையாக அமைந்துள்ள சித்தாந்த வேறுபாடே (திராவிட - ஆரிய) மோதலுக்கு காரணமாக அமைகின்றது என்றால் டெல்லி ஆம் ஆத்மி க்கும் ஒன்றிய பி.ஜே.பி. க்குமான சித்தாந்த அடிப்படை எது ?

மக்களவைத்
தேர்தலை
சந்திக்கும் எதிர்கட்சிகள்
மாநில உரிமை,
உரிமை
விசயத்தில் ஓர்
தெளிவான
நிலைக்கு வரவேண்டும்.

மேலும் தேசியம், திராவிடம், இந்துத்துவம், கம்யூனிசம் என்ற சித்தாந்தங்கள் பேசப்படும் நிலைமையில் இந்தியா ஒன்றியத்தில் பல மொழிகள் தேசிய இனங்களாக தனது எல்லைப்பரப்பில் பல சிக்கல்கள் இருந்தாலும் ஒரு கூட்டமைப்பாக செயல்பட வேண்டிய கட்டாயம் உலக அரங்கின் போக்கொடு இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது

மணிப்பூர் மாநிலத்தில் இரண்டு இனமக்களுக்குள் மோதலை ஏற்படுத்தியுள்ளது எவ்வளவு மோசமான நிலைக்கு ஒன்றிய உறுப்பு மாநிலத்தை தள்ளியுள்ளதை மற்ற மாநில மக்கள் உணர வேண்டியுள்ளது. மேலும் மக்களுக்குள் வேற்றுமையையும் வெறுப்பையும் விதைக்கும் சக்திகளை தனிமைப்படுத்திட வேண்டும் என்பதையும் சேர்த்தே உணர வேண்டும்.

எதிர்கட்சிகளின் ஒற்றுமை என அடுத்த மக்களவைத் தேர்தலை சந்திக்கும் எதிர்கட்சிகள் மாநில உரிமை விசயத்தில் ஓர் தெளிவான நிலைக்கு வரவேண்டும்.



தேர்தலில் பங்கெடுக்காத ஆனால் பரந்துபட்ட மக்கள் நலம் நாடும் இடதுசாரிச் சக்திகள் நடைமுறையில் உள்ள இந்திய ஒன்றிய அரசியல் அமைப்பில் மாநிலங்களின் உரிமையைக் குறைக்கும் பிரிவிற்கு எதிரான நடவடிக்குக்கு மக்களை விழிப்புறச் செய்வதும் நாடாளுமன்ற எதிர்கட்சிகளின் கூட்டமைப்பை ஒன்றியத்தில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பரவலாக்கச் செய்வதை அவர்கள் தனது குறைந்த பட்ச திட்டமாக வைத்து செயல்பட வேண்டிய கட்டாயத்தில் இருப்பதை உணர வேண்டும். ●

# செறிவூட்டப்பட்ட அரசு

தோழர் பாட்டாளி

கடந்த சிவராத்திரி அன்று கோவை ஈசா மையத்தில், 'மகா சிவராத்திரி விழா' நடைபெற்றது. நாட்டின் முதல்குடிமகள் திருமதி. திரௌபதி முர்மூஅவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்கள். அப்போது ஈசா மையத்தில் 'செறிவூட்டப்பட்ட ருத்ராட்சம்' வழங்கப்படும் என்று விளம்பரம் ஜொலித்தது. நமக்கோ அது என்ன? செறிவூட்டப்பட்ட ருத்ராட்சம்? என்ற கேள்வி எழுந்தது. இப்போதுதான் புரிகிறது 'செறிவூட்டப்பட்ட' என்பதின் சூட்சுமம். ஒன்றியத்தின் 75ஆவது ஆண்டு சுதந்திர தின உரையில், "2024க்குள் பொது விநியோக முறை (PDS) (அதாவது, நமது ரேசன் கடைகளில்) மற்றும் பள்ளிகளில், மதிய உணவு உட்பட பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் அரிசி செறிவூட்டப்பட்ட அரிசியாக வழங்கப்படும்" என்று பிரதமர் மோடி அவர்கள் அறிவித்தார். நமது மாநிலத்தின் உணவுத்துறை அமைச்சர், திரு. சக்கரபாணி அவர்கள், ''அடுத்த வருடம் ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல், இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்குவதற்கு மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும், வழக்கமான அரிசியுடன், செறிவூட்டப்பட்ட அரிசியைக் கலந்து விற்பனை செய்யப்படும்'' என்று தகவல் தெரிவித்துள்ளார். ரேசன் அரிசி நமக்குத் தெரியும். அதென்ன செறிவூட்டப்பட்ட அரிசி? அரிசியைச் செறிவூட்டுவதற்கு உலக அளவில் பல வழிமுறைகள் கையாளப்படுகின்றனவாம். நமது ஒன்றியத்தில், ஆரம்ப காலத்தில் தேவையான சத்துகளை அரிசியின் மேல் பூச்சாகப் பூசிச் செறிவூட்டினார்களாம். ஆனால், என்ன பிரச்சனை என்றால்? தண்ணீரில் அரிசியைக் கழுவும்போது, களையும்போது, இட்லி தோசைக்காக ஊற வைக்கும்போது, மேலே செயற்கையாகப் பூசப்பட்ட, அதாவது அவர்கள் மொழியில் செறிவூட்டிய, அந்தச் சத்துக்கள் தண்ணீரில் கரைந்துபோய் விடும். நீங்கி விடும். அகன்று விடும். அதனால் ஒரு பயனும் இல்லை.



எனவே, இக்குறைபாட்டைக் களைந்த அதி புத்திசாலிக் கண்டுபிடிப்பாளர்கள், தற்போது அரிசியையும், தேவையான சத்துக்களையும் ஒன்றாகச் சேர்த்து கூழாக்கி, மாவாக்கி, அந்தக் கூழாக்கிய மாவை அச்சில் ஊற்றி, தங்கம், வெள்ளி, இரும்பு போன்ற உலோகங்களை அச்சில் ஊற்றி, நமக்குத் தேவையான பலப்பல வடிவங்களைக் கொண்டு வருவோமே அதுமாதிரி, அந்தக் கூழாக்கிய மாவை, அரிசி வடிவ அச்சில் ஊற்றி, அரிசியைப் போலவே கொண்டு வந்து விடுவார்களாம். பார்க்க அது சாதாரண அரிசியைப் போலவே இருக்கும். எந்த ஒரு வித்தியாசமும் நமக்குத் தெரியாது. பிறகு, இதை ஒரு கிலோ அரிசிக்கு 10 கிராம் வீதம், அதாவது 100 கிலோ அரிசிக்கு ஒரு கிலோ செறிவூட்டப்பட்ட செயற்கை அரிசியைக் கலப்படம் செய்து விற்பார்களாம். நமது குழந்தைகளுக்கு அந்தக் கலப்பட அரிசியை வழங்குவார்களாம். அதுதான் செறிவூட்டப்பட்ட அரிசியாம். சரி. எதற்கு அய்யா? இந்தச் செறிவூட்டப்பட்ட அரிசி? என்று கேட்டால், இந்திய ஒன்றியத்தில் பிறக்கும் குழந்தைகளில், மூன்றில் ஒரு குழந்தை நுண்ணூட்டச் சத்துக்குறைபாடுடன் பிறக்கிறதாம். அப்படியான நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு இரத்தசோகை, நோய் எதிர்ப்புச் சக்தி, அறிவாற்றல் செயல்பாடு பலவீனமாதல் போன்ற பிரச்சனைகள்



வர வாய்ப்புள்ளது. இது குழந்தைகளுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும்தானாம். எனவே, குழந்தைகள் மற்றும் பெண்களின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்குவதற்காக செறிவூட்டப்பட்ட அரிசி வேண்டுமாம். அதற்காகத்தான் இந்தச் செறிவூட்டப்பட்ட அரிசியாம். அடக் கொடுமையே. இங்கு ஏற்கெனவே ஆயிரத்தெட்டு உணவு அரசியல். இதில், இது என்ன புதுக்கொடுமை? என்று கேட்க வேண்டியிருக்கிறது. உண்மையில், நமது உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான சத்துக்களை எப்படிப் பெறுவது? எப்படி உண்பது? எப்படி முறைப்படுத்துவது? என்கிற விழுமியமானதொரு உணவுப் பண்பாட்டிற்குச் சொந்தக்காரார்கள் நாம். மூத்த முன்னோடியான அறிவு மரபின் சொந்தக்காரார்கள் நாம். ‘பசித்துப் புசி’ என்று எளிய மக்கள் வழக்கிலும், “மருந்ததென வேண்டாவாம் யாக்கைக்கு” என இலக்கிய வழக்கிலும், அறிவார்ந்த, ஆரோக்கியமான, உணவுப் பண்பாட்டின் மரபு நாம். உண்மையில் நாம் உண்ணும் உணவில் இருக்கிறது அதி முக்கியமான ஊட்டச்சத்துக்கள். இயற்கையான காய்கறிகளில், கனிகளில், தானிய மணிகளில் இருக்கிறது ஊட்டச் சத்துக்கள். நமது உடலில் ஏற்படும் சத்துக் குறைபாட்டைச் சரிசெய்ய, சீர்செய்ய, சத்துள்ள காய்கறிகளைச் சாப்பிடுவது ஒருவகை. சத்தை மட்டும் தனியாக, அதாவது மருந்தாக எடுத்துக்கொள்வது மற்றொரு வகை. இதில், கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், மருந்துகளைவிட, உணவுகளில் இருக்கும் சத்துக்களைத்தான் உடல் எளிதாகக் கிரகித்துக் கொள்ளும் என்பதுதான் அறிவியல். இவர்கள் என்னடாவென்றால்? அறிவியலுக்கு எதிராக இயங்குகிறார்கள். அதை நமக்குத் திணிக்கிறார்கள். நமது முப்பாட்டன், முப்பாட்டனுக்கும் மூத்த பாட்டன், பாட்டிகளெல்லாம் இறக்கும்வரை நன்கு திடகாத்திரமாய்த்தானே இருந்தார்கள். இயங்கினார்கள். உழைத்தார்கள். நிலத்தில் பாடுபட்டுத் தானிய மணிகளை விளைவித்து, உண்டு, செரித்துக் காலம் கழித்து வந்தார்கள். அவர்கள் எந்த செறிவூட்டப்பட்ட அரிசியைத் தின்று திடகாத்திரமாய் இருந்தார்கள்? அவ்வளவு தூரம் முன்னே போகவேண்டாம். நமது பாட்டன், பாட்டிகள் எந்த செறிவூட்டப்பட்ட அரிசியைத் தின்று திடகாத்திரமாய் வாழ்ந்து மடிந்தார்கள்?

> குழந்தைகள் மற்றும் பெண்களின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்குவதற்காக செறிவூட்டப்பட்ட அரிசி வேண்டுமாம்.... அடக் கொடுமையே. இங்கு ஏற்கெனவே ஆயிரத்தெட்டு உணவு அரசியல். இதில், இது என்ன புதுக்கொடுமை?

நமக்கு விவரம் தெரிந்து, தீபாவளி, பொங்கல் என்று சிறப்பு விழா நாட்களில்தான், ‘நெல்லுச் சோறு’ என்று சிறப்பு உணவாகக் கொடுக்கப்படும். மற்றபடி கம்பு, கேழ்வரகு, சோளம், சாமை, திணை, குதிரைவாலி என்று இயல்பாகவே பல தானிய உணவுமுறைதான். அது எப்போது ஒற்றைத் தானிய உணவானது? காலையில் இட்லி, தோசை மதியம் பட்டை தீட்டப்பட்ட வெள்ளைவெளேர் என்றிருக்கும் தூய வெண் அரிசி, மறுபடியும் இரவிற்கு அதே அரிசிச் சோறு அல்லது “எங்க வீடுகள்ல எப்பவும் டிபன்தான்” என்று பீற்றிக் கொள்ளும் அரிசி மாவு உணவுதான். இப்படி மூன்று வேளைக்கும் அரிசி மட்டுமே என்கிற ஒற்றைத் தானிய உணவு அரசியல் எப்படி வந்தது?

முன்பு சொன்னார்கள், உழைக்காமல் உடலுழைப்பின்றி முதலாளியாய் இருப்பவனுக்குத் தான் சர்க்கரை வியாதி வருமாம். அது பணக்கார வியாதியாம். இன்று எமது தொலைதூர எளிய கிராமத்துக் கூலி உழைப்பாளிக்கும் நீரழிவு நோய். மருந்து மாத்திரைகளோடு, ஊசி என்றாலே பயந்து, கண்களை இறுக்க மூடிக்கொண்டு, நடுங்கும் எங்கள் எளிய மக்கள் கைகளில், இன்று அன்றாட இன்சுலின் ஊசிகள். இப்போது சொல்கிறார்கள். பரிந்துரைக்கிறார்கள். வாய் கிழிய வியாக்யானம் செய்கிறார்கள். அரிசி என்றாலே அது வெறும் மாவுச் சத்து மட்டுந்தானாம். வெறும் ‘கார்போ ஹைட்ரேட்’ மட்டுந்தானாம். எனவே, பல தானிய உணவிற்கு மாறுங்கள் என்கிறார்கள்.

எப்படியிருக்கிறது கதை? அப்படித்தானய்யா நாங்கள் ஆண்டாண்டு காலமாய் இந்த மண்ணில் உண்டு, உறங்கி, புணர்ந்து, எங்கள் வம்சா வழிகளைப் பெருக்கி வாழ்ந்து கிடந்தோம். இதில் தந்திரமாய் உங்கள் உணவு அரசியலை உள் நுழைத்துவிட்டு, இப்போது வேறுவகையில் இலாபம் பார்க்கத் துடிக்கிறீர்கள்,

நமது தொலைக்காட்சிகளில் திடீரெனத் தோன்றிடும் அந்த நடிகை கேட்பார். “உங்கள் பற்பசையில் உப்பு இருக்கிறதா?” என்று. ஏம்மா. காலங்காலமாய் எங்கள் பாட்டனும், பாட்டியும் அடுப்புக் கரியையும், உப்பையும்



கொண்டுதானம்மா பல் துலக்கி வந்தார்கள். ‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி’ என்று, குச்சிகளைக் கொண்டு பல் துலக்கி, ஆரோக்கியமாய் வாழ்ந்து வந்தவர்களை, திருப்புகழைப் பாடாமலேயே வாய்துர் நாற்றமின்றி, வாய் மணக்க மணக்க வாழ்ந்து திரிந்தவர்களை நிறுத்தி, அவர்கள் கையில் பற்குச்சியையும் பற்பசையையும் திணித்துவிட்டு, இப்போது கேட்கிறீர்கள்? உங்கள் பற்பசையில் உப்பு இருக்கிறதா? என்று. யாருக்காக வந்தது? இந்த உணவு அரசியல்? யார் நலன் காக்கத் திணிக்கப்பட்டது? இந்த உணவு அரசியல்? யாரின் லாபப் பெருக்கெடுப்புக்குத் திணிக்கப்பட்டது இந்த உடல் நலஅரசியல்?

அட. மெத்தப் படித்த மேதைகளே. சூறையாடும் முதலாளிகளின் லாபப்பெருக்கெடுப்பிற்கு அடி பணிந்து, ஏவல் செய்யும் ஆட்சியாளர்களே. உங்களுக்குத் தெரியுமா? சத்துக் குறைபாடு என்பது, நபருக்கு நபர் வேறுபடக்கூடியது என்று. நபருக்கு நபர், ஆளுக்கு ஆள், உடல் தன்மை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வேறு வேறு மரபணு. வேறு வேறு நோய் எதிர்ப்புக் கூறு. அவரவர்களின் கை ரேகை போல. ஆளாளுக்கு மாறுபடும். வேறுபடும். இதில் எப்படி எல்லோருக்குமான, பொத்தாம் பொதுவான, ஒரே மாதிரியான ஊட்டச்சத்து மருந்து? உண்மையில், ஒருவருக்கு அதில் தேவையான ஊட்டச்சத்துக் கிடைத்தாலும், மற்றொருவருக்கு அதுவே பின்விளைவுகளையும் ஏற்படுத்தலாம். மேலும், செயற்கை ஊட்டமேற்றப்பட்ட உணவால், உடலில் சத்து அதிகரித்ததற்கான சான்று உலகில் எங்கேயும் இருப்பதாகத் தெரியவில்லை. கர்ப்பிணியான எங்கள் தாய்மார்களைப் பார்த்து என்ன சொல்கிறீர்கள்? அம்மா. உங்களுக்கு இரும்புச் சத்துக் குறைபாடு உள்ளது. ‘ஹீமோகுளோபின்’ கம்மியா இருக்கு. எனவே, இந்த இரும்புச் சத்து டானிக்கைச் சாப்பிடுங்கள் என்று பரிந்துரைக்கிறீர்கள். மருந்து நிறுவன விற்பனை அதிகரிப்பிற்கு, லாப வேட்கைக்குச் சேவகம் செய்கிறீர்கள். உண்மையில், ‘ஹீமோகுளோபின்’ குறைபாட்டுக்கு இரும்புச் சத்து மட்டுமன்றி வேறு பல ஊட்டச் சத்துக் குறைபாடுகளும் காரணமாக இருக்கின்றன என்பதுதான் உண்மை. உடலியல் இப்படி இருக்க, இரும்புச்சத்தை மட்டுமே அதிகரித்தால், அது ‘ஹீமோகுளோபின்’ பிரச்னையைச் சரிசெய்துவிடாது. மாறாக, உணவில் இரும்புச்சத்து அதிகரிப்பதால், நீரிழிவு, கணையப் பிரச்னை, காசநோய் போன்ற நோய்கள் வருவதற்கான சாத்தியக் கூறுகளும் அதில் இருப்பதாக மருத்துவ அறிவியல் கூறுகிறது. இப்படிச் சொல்லிக்கொண்டே போனால் நிறைய இருக்கிறது. சொல்லிச் சொல்லித் தீராத ஆயிரமாயிரம் உணவு அரசியல் உண்டு இங்கு. எழுதி எழுதித் தீராத ஆயிரமாயிரம் பக்கங்கள் உண்டு இங்கு. இந்த இடத்தில் நம் கவனக் குவிப்பு ஒன்று. அப்படியானால்? மீண்டும் அந்தப் பழைய காலத்திற்கே, சமூகத்தைப் பின் தள்ளிக் கொண்டு போகப் போகிறோமா நாம்? இல்லை. நிச்சயமாக இல்லை. வளர்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் இவை எல்லாம் வேண்டும். கண்டிப்பாக வேண்டும். ஆனால், அது யாருக்காக? யார் நலன் நோக்கி? என்பதிலும், இந்தப் பூமியைச் சேதப்படுத்தாமல் நுகர்ந்து, அதை முன்னிலும் மேம்படுத்தி, வருகிற சந்ததிகளுக்குப் பக்குவமாகக்

**உண்மையில் நமக்குத் தேவை.**

**உடனடித் தேவை.**

**செறிவூட்டப்பட்ட அரிசி அல்ல.**

**செறிவூட்டப்பட்ட அரசுகளே தேவை.**


**மக்கள் நலன் சார்ந்த அரசு மட்டுமே தேவை**

கையளித்துப் போவதுதான் ஒரு அறிவார்ந்த சமூகத்தின் கடமை.
இறுதியாக,

இந்தச் 'செறிவூட்டப்பட்ட' என்பதின் அரசியலை மட்டும் நாம் தெரிந்து கொண்டால் போதுமானது. இப்படித்தான் முன்பு கேட்டார்கள். உங்கள் உப்பில் அயோடின் இருக்கிறதா? என்று. என்னவானது? சிறு குறு அளவில் உப்பளங்கள் வைத்து உப்புக் காய்ச்சி வணிகம் செய்து கொண்டிருந்த சிறு குறு உப்பு வணிகம், டாட்டா போன்ற பெரு வணிகக் குழுமங்களின் கைகளுக்குச் சென்று விட்டது. முன்பெல்லாம் இரவில், எங்கள் எளிய சிற்றூர் மளிகைக் கடையினை அடைத்திடும்போது, எல்லாப் பொருட்களையும் எடுத்தடைத்துப் பாதுகாக்கும் எங்கள் மளிகைக் கடைக்காரர், வாசலில் மட்டும் உப்பு மூட்டையை அப்படியே வைத்து விடுவார். இன்று அப்படியா? கல் உப்பைக் 'கிரிஸ்டல் உப்பு' என்றும். வி ர லி டு க் கி ல் நைசாக வழு வழுத்துக் கீழுதிரும் பொடி உப்பு வரை. டாட்டா. பிர்லா என ஏன்? ஆன்மிகச் சாமியார் என்ற போர்வையில், பன்னாட்டுச் சூறையாடும் முதலாளியாக வளர்ந்து நிற்கும் பாபா ராம் தேவ்வின் பதஞ்சலி குழுமத்தின் கைகளில் உப்பு வணிகம் லாபம் கொழித்துத் தள்ளுகிறது. ஒரு சாதாரண உப்புதானே என்று வாளாவிருக்காமல், அது அந்நிய ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கான அரசியல் எதிர்ப்பு என்று, மிக நீண்ட நெடிய உப்புச் சத்தியாக்கிரக அரசியல் போராட்டங்களைச் சந்தித்த வரலாறு நமக்கு உண்டு. என்ன? அதை அரசியல் பாடத்திற்காக, மதிப்பெண்களுக்கானதாக மட்டுமே குறுக்கி விட்டோம். ஒரு சாதாரண உப்பு எப்படி அயோடின் கலந்த உப்பாக, செறிவூட்டப்பட்ட உப்பாக, இந்நாட்டு, பன்னாட்டுச் சூறையாடும் வணிக முதலாளி

மெத்தப்படித்த
மேதைகளே.
சூறையாடும்
முதலாளிகளின்
லாபப்பெருக்கெடுப்பிற்கு
அடிபணிந்து,
ஏவல் செய்யும்
ஆட்சியாளர்களே





முதலைகளின் பகாசுர வணிகக் கைகளில் மாட்டிக் கொண்டதோ, அதைப்போலவே, நாளை நமது உழவுத் தொழிலும் கை மாறப் போகிறது. மாறிவிடப் போகிறது. மாற்றிவிடச் சூழ்ச்சி வலை பின்னப்பட்டு வருகிறது என்பது மட்டும் திண்ணம். அதன் அரசியற் சொல்லாடலே, இந்த 'செறிவூட்டப்பட்ட' என்பது. தென்னகத்தின் நெற் களஞ்சியங்கள், நாளை அம்பானி, அதானி நெற்களஞ் சியங்களாகலாம். நமது
காவிரி டெல்டாக்கள், பன்னாட்டு, இந்நாட்டுச் சூறையாடும் முதலாளிகளின் டெல்டாக்கள் ஆகலாம். இதற்குத் தகுந்த முன்னுதாரணம். நமது சென்னைக் கடற்கரை இப்போது 'அதானி கடற்கரை' என்று ஆகியிருக்கிறதே அதைப்போல. ஆக, இங்கு நமக்குத் தேவை. 'செறிவூட்டப்பட்ட' என்கிற மாய்மாலங்கள் அல்ல. அந்த மாய்மாலங்களை, மக்கள் மத்தியில் உலவவிட, நிலவவிட, நிலைநிறுத்திடச் செய்யும் சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஒன்றுதான், நாம் இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்ன, 'சிவராத்திரியில் செறிவூட்டப்பட்ட ருத்ராட்சங்கள்'. எளிய மக்களின் கடவுள் நம்பிக்கையின் வாயிலாகச் சொல்லிச் சொல்லி, அவர்களை இந்தச் சொல்லாடல்களுக்கு வசப்படுத்துவதுதான். உண்மையில் நமக்குத் தேவை. உடனடித் தேவை. செறிவூட்டப்பட்ட அரிசி அல்ல. செறிவூட்டப்பட்ட அரசுகளே தேவை. மக்கள் நலன் சார்ந்த அரசு மட்டுமே தேவை. அப்படியில்லாமல் மக்கள் விடுதலைக்கெதிராகத்தான்
இந்த அரசுகளும் ஆட்சியாளர்களும் செயல்படுவார்கள் எனில், அதை முறியடிக்கும், அம்பலப்படுத்தும், முகத்திரை கிழிக்கும், தெளிவுபடுத்தும், வென்றெடுக்கும் மகத்தான மக்கள் பணி மக்கள் விடுதலைக்காய் களமாடும் நம் முன்னே உள்ளது. ●

# நந்தினி ஆனந்தன் அறிக்கை



இன்று (15.08.2023) கோவை மத்திய சிறையில் இருந்து போனில் பேசினார்கள். (சிறைவாசிகள் வாரம் ஒரு முறை 10 நிமிடம் குடும்பத்தாருடன் போனில் பேசும் வசதி உள்ளது)

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு பற்றிய புத்தகம் படித்துக் கொண்டிருப்பதாக சொன்னார்கள்.

இதுவரை பெயர் கேள்விப்படாத எத்தனையோ பெண்களின் தியாக வரலாறுகளை அப்புத்தகம் மூலம் தெரிந்து கொண்டதாக சொன்னார்கள். அவர்களின் தியாகத்துக்கு முன்னால் நாம் செய்யும் பணிகள் மிகச்சிறியவை என்றும் நாட்டுக்காக இன்னும் மிக அதிகமாகப் போராட வேண்டும் என்றும் உணர்வு பொங்க பேசினார்கள்.

சுதந்திர தினத்தன்று கூட சிறையில் இருக்கிறார்களே என்று ஒரு புறம் சற்று வருத்தமாக இருந்தாலும் அநீதியான ஆட்சியாளர்களுக்கு எதிராக முன்பை விட இன்னும் பல மடங்கு வீரியத்துடன் போராட இருவரும் தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் ஆறுதலாகவும் உள்ளது.

**ஆனந்தன், குணா**

திமுக ஆட்சியில்..

2021 சுதந்திர தினத்தன்று.. மோடி அரசின் கொரோனா மோசடி நாடகத்தை எதிர்த்து கவர்னர் மாளிகை முன்பு போராடியதற்காக நந்தினியை புழல் சிறையிலும் என்னை சென்னை சைதாப்பேட்டை சிறையிலும் அடைத்து வைத்திருந்தது திமுக அரசு..

2022 சுதந்திர தினத்தன்று.. மோடி ராஜினாமா செய்ய வேண்டும் என மதுரை காந்தி மியூசியம் முன்பு போராடியதற்காக நந்தினி / நிரஞ்சனாவை தல்லாகுளம் காவல் நிலையத்தில் அடைத்து வைத்தது திமுக அரசு..

2023 சுதந்திர தினத்தன்று.. RSS சதி கும்பலை எதிர்த்ததற்காக நந்தினி நிரஞ்சனாவை கோவை மத்திய சிறையில் அடைத்து வைத்துள்ளது திமுக அரசு..

**---ஆனந்தன்**

நான் என் குழந்தைகளுக்கு அரசியல் சொல்லிக் கொடுத்தேன். அவர்களை சட்டம் படிக்க வைத்தேன். அநீதிக்கு எதிராக போராட வேண்டியதன் அவசியத்தையும் எப்படி போராடுவது என்பதற்கான வழிமுறைகளையும் சொல்லிக் கொடுத்தேன். போராட்டக் களத்திற்கு உடன் அழைத்துச் சென்று வழிகாட்டினேன்..

ஆனால் தொடர்ச்சியான போலீஸ் அடக்குமுறை பொய் வழக்குகள் சிறை பாசிச RSS- பாஜக பொறுக்கிகளின் அடாவடித்தனம் அவதூறுகள் ஆபாசமான கீழ்த்தரமான பேச்சுகள் இவை தான் நந்தினி நிரஞ்ஜிசனாவை அநீதியான ஆட்சியாளர்களுக்கு எதிரான போராளிகளாக மாற்றியுள்ளது. வாழ்நாள் முழுவதும் அநீதிக்கு எதிராக போராடும் மன உறுதியையும் துணிவையும் எப்படிப்பட்ட அடக்குமுறையையும் சந்திக்கும் தைரியத்தையும் இருவரும் பெற்றுள்ளனர்.




RSS- பாஜக பாசிச கும்பலின் அடியாளாக செயல்படும் திமுக அரசின் காவல்துறை..

தற்போது நந்தினி நிரஞ்சனா இருவரும் ஊட்டியில் நடந்த RSS சதிக்கூட்டத்துக்கு எதிராக போராடியதற்காக பொய்வழக்கு போடப்பட்டு 13.07.2023 முதல் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

படம் பாஜக -RSS பொறுக்கிகும்பலின் ரௌடித்தனத்துக்கு எதிராக கடந்த 31.05.2023 அன்று சென்னை பாஜக தலைமையகமான கமலாலயம் முன்பு நந்தினிநிரஞ்சனா போராடிய போது திமுக அரசின் போலீஸ் நடத்திய அராஜகம்..

**---ஆனந்தன்**



# தமிழர் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட வள்ளலார்

பழ.நெடுமாறன்

கி.பி. 1757 முதல் 1887ஆம் ஆண்டு வரையிலான நூற்றாண்டுக் காலம் இந்தியப் பெரு நாடு அந்நியர்களின் படையெடுப்பிற்கும், ஆக்கிரமிப்பிற்கும் உள்ளான காலகட்டமாகும். 700க்கும் மேற்பட்ட சிற்றரசர்களும், அவர்களை மிரட்டிப் பணிய வைத்து நாட்டின் வளங்களைச் சூறையாடுவதற்கு ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம் ஓயாது முயன்று சிறுகச்சிறுக வெற்றி பெற்றுக் கொண்டிருந்த காலகட்டமாகும். கி.பி. 1806ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிரான முதல் புரட்சி தமிழ்நாட்டில் வேலூரில் வெடித்தது. அதற்கு முன்பாக மைசூரில் திப்புசுல்தானும் நெற்கட்டும் சீமை பூலித்தேவரும், சிவகங்கை இராணி வேலுநாச்சியாரும், மருது சகோதரர்களும், பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை போன்றவர்களின் ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டம் மூண்டெழுந்து அவர்கள் அனைவரும் வீரச்சாவைத் தழுவினர். அதற்கு 50ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 1857ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திரப் போராட்டம் வட இந்தியாவில் வெடித்தது.

“தடியெடுத்தவன் தண்டல்காரன்” என்ற நிலையில் நாடு அமைதியற்றுத் தத்தளித்தது. சமய வேறுபாடுகளும் சாதி வேறுபாடுகளும் மக்களைக் கூறுபோட்டுக் கொண்டிருந்தன. தீண்டாமை என்னும் தீமை புற்று நோயாக வளர்ந்திருந்தது. மொத்தத்தில் சமுதாயம் புரையோடிக் கிடந்தது. இந்தச் சூழ்நிலையில் வங்காளத்தில் இராசாராம் மோகன்ராய், இராமகிருட்டிணர், பஞ்சாபில் தயானந்த சரசுவதி சுவாமிகள், தமிழகத்தில் வள்ளலார் இராமலிங்க அடிகள் ஆகியோர் தோன்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டவும், சமுதாயக் கேடுகளைக் களையவும், ஆன்மநேய ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தவும் முயன்றார்கள்.

> *தீண்டாமை என்னும் தீமை புற்று நோயாக வளர்ந்திருந்தது. மொத்தத்தில் சமுதாயம் புரையோடிக் கிடந்தது. இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் வள்ளலார் இராமலிங்க அடிகள் தோன்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டவும், சமுதாயக் கேடுகளைக் களையவும், ஆன்மநேய ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தவும் முயன்றார்கள்.*

மேற்கண்ட சமுதாயச் சிந்தனையாளர்களில் தனித்தன்மை வாய்ந்தவராகவும், அனைவருக்கும் முன்னோடியாகவும் வள்ளலார் அவர்கள் விளங்கினார். விக்கிரக வழிபாட்டை அவர் ஏற்கவில்லை. சமயம் கடந்து அனைவரும் ஏற்கும் வண்ணம் சோதி வழிபாட்டை மக்களிடையே பரப்பினார்.

தொடக்க காலத்தில் வள்ளலார் அவர்கள் சைவ சமயத்தைச் சார்ந்து முருகன், தில்லை நடராசன் ஆகியோரை வழிபட்டுப் பாடினார். அவர் இயற்றிய திருவருட்பாவில் முதல் ஐந்து திருமுறைகள் சைவத்தையும், சிவவழிபாட்டையும் போற்றியவையே ஆகும். அவருடைய ஆறாம் திருமுறைதான் சோதி வழிபாட்டினையும், சுத்த சன்மார்க்க நெறியையும் வலியுறுத்தியது. முதல் ஐந்து திருமுறைகளில் எவ்வளவு பாடல்கள் உள்ளனவோ அவைகளைவிட, அதிகமான பாடல்கள் ஆறாம் திருமுறையில் மட்டும் அடங்கியுள்ளன.

சாதி, சமய, வேறுபாடின்றி சன்மார்க்க நெறியில் வாழ்வதுதான் இகத்தில் பரத்தைப் பெறுவதாகும் என்பதே வள்ளலாரின் கோட்பாடாகும். மக்களிடம் புரையோடியிருந்த மூடநம்பிக்கைகள், சடங்குகள், பல கடவுளர் வழிபாடு, ஆகியவற்றை மாற்றிச் சீர்திருத்த முயன்றார். அனைவருக்கும் பொதுமையான ஒளி வடிவில் வழிபடுதல், சாதி, சமய வேறுபாடின்றி உலகோர் அனைவரும் ஆன்மநேய ஒருமைபாட்டை அடைதல், செல்வர் வறியர் நிலை மாற்றல், ஆண் பெண் யாவருக்கும் கல்வி அளித்தல், புலால் மறுத்தல், கொல்லாமை, ஒழுக்கம் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்ட சன்மார்க்க சங்கம் என்னும் மக்கள் இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

“தையலார் கொண்டாடும் விளக்கீடு” என மாணிக்கவாசகரும், “தீப மங்களா நமோ நம” என அருணகிரியாரும் சுட்டியது இம்மரபைதான். தமிழர் மரபில் நெடுங்காலமாக நிலவி வந்த சோதி வழிபாட்டை தத்துவ நெறிக்குக் கொண்டு சென்றவர் வள்ளலார் மட்டுமே. புறத்திலே விளங்கும் இறையொளி (அக்கினி, கதிரவன், சந்திரன், விண்மீன்களின் ஒளி) அகத்திலும் உண்டு. அவ்வாறு உள்ளொளியாக (ஆன்ம ஒளி, சீவ ஒளி, மன ஒளி, கண்ணொளி) விளங்கும் இறைவனைக் கண்டு தொழவேண்டும் என்பதை விளக்கவே சத்தியஞான சபையில் சோதி வழிபாட்டு முறையை எல்லோருக்கும் பொதுவான இறைவழிபாடாகச் செயல்படுத்தினார்.

சமுதாயப் புரட்சியாளர்

வள்ளலார் உலகிற்கு வழங்கிய முழுமுதற் கோட்பாடு சீவகாருண்யம் என்னும் உயிரிரக்கப் பண்பாகும். உயிர்கள் யாவும் சமம் என்பதை உணர்ந்து அவற்றின் இன்ப துன்பத்தில் பங்குகொண்டு ஒன்றிணையும் உணர்வைத்தான் சீவகாருண்யம் அல்லது ஆன்மநேயம் என்றார் வள்ளலார். அவரின்

சீவகாருண்யம் என்பது ஒழுக்கத்தோடு இணைந்ததாகும். "சீவகாருண்ய ஒழுக்கம்" என்ற பெயரில் ஒரு நூலையே எழுதியுள்ளார்.

"பசித்திரு, தனித்திரு, விழித்திரு" என்பதே அவர் போதித்த மூன்று மந்திரங்களாகும். வள்ளலாருக்கு முன்பு வாழ்ந்த அருள்நெறிச் சான்றோர் அனைவரும் பிறவாமையை வேண்டினர். ஆனால். வள்ளலார் இறவாமையை வேண்டினார்.

தனக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருமூலரும், திருநாவுக்கரசரும் வேதங்களையும், சாத்திரங்களையும் மிகக் கடுமையாகச் சாடியதைப் போலவே வள்ளலாரும் அவற்றைச் சாடி புறத்தொதுக்கினார்.

சாத்திர மோதும் சதுர்களை விட்டுநீர் மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின் பார்த்தஇப் பார்வை பசுமரத் தாணிபோல் ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே!" என்றார் திருமூலர்.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்தி ரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்! பாத்திரஞ் சிவ மென்று பணிதிரேல் மாத்திரைக்குள் அருளுமாற் பேறரே" என்றார் திருநாவுக்கரசர். அவர்களைப் போலவே சாதி சமயச் சடங்குகள் நிறைந்த வேதங்களிலும், சாத்திரங்களிலும் ஆன்மநேய ஒருமைப்பாடு காண அவர் விரும்பவில்லை. அவை அனைத்தும் பொய், சழக்கு எனக் கூறி வெறுத்தார்.

சாதி குலம் என்றும் சமய மதம் என்றுமுக
நீதியியல் ஆச்சிரமம் நீட்டென்றும் ஓதுகின்ற
பேயாட்டம் எல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம்
வாயாட்டம் தீர்ந்தனவே மற்று,
வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின் விளைவறியீர் சூதாகச்
சொன்னவலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை
என்ன பயனோ இவை.

வேதங்களையும் விரிவுகளையும் புராண சாத்திரங்களையும் வடமொழி வாயிலாகவே திறம்படக் கற்றவர் எனினும் பகுத்தறிவுக்கும் உலகவொற்றுமைக்கும் உயிர் நலத்துக்கும் ஒவ்வாதவற்றைக் கடுஞ் சொற்களால் இகழ்ந்துரைத்தவர் வள்ளலார் போல் எவருமில்லை.

"உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்களெல்லாம் உறவினத்தார் அல்லர்; அவர் புறவினத்தார்" என்று கூறிய வள்ளலார் அவர்கள், உயிர்க்கொலை செய்பவரோ, புலால் தின்பவரோ பசி என்று வந்துவிட்டால் சத்திய தர்ம சாலையில் அவர்களுக்குச் சோறிடும்படி கூறிய பெருங்கருணையாளராகத் திகழ்ந்தார்.

தனது சமுதாயப் புரட்சிக்குக் கருவிகளாகக் கீழ்க்கண்ட நான்கு அமைப்புகளை அவர் நிறுவினார்.

(1) சமரச சுத்த சன்மார்க்க சங்கம்
(2) சத்திய தரும சாலை
(3) சத்திய ஞான சபை
(4) சித்தி வளாகம்

முதல் மூன்றும் வடலூரிலும், நான்காவது அருகிலுள்ள மேட்டுக்குப்பத்திலும் அமைந்துள்ளன. தனது கோட்பாடுகளைப் பரப்புவதற்கு புத்தர் தோற்றுவித்தப் பௌத்த சங்கத்திற்குப் பிறகு வள்ளலார் அவர்கள் தனது கோட்பாடுகளைப் பரப்ப சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். வேறு யாரும் தங்கள் கோட்பாடுகளைப் பரப்புவதற்கு சங்கங்களை அமைக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## மடமும் சங்கமும்

தமிழ்நாட்டில் வள்ளலாருக்கு முன்பிருந்த சமயத் துறவிகள் மடங்களையே நிறுவினார்கள். தீட்சைப் பெற்றுக் காவிக் ஆடைச் தரித்தார்கள். அந்தந்த சாதிகளைச் சேர்ந்த துறவிகள் தங்களின் சாதிகளைச் சேர்ந்தவர்களையே தாங்கள் நிறுவிய மடங்களின் தலைவர்களாக நியமித்தார்கள். இந்தப் போக்கு இன்றுவரை தொடர்கிறது.

ஆனால் வள்ளலார் எந்தக் குருவிடமும் போய்த் தீட்சைப் பெறவில்லை; மடம் அமைக்கவில்லை; காவி ஆடை தரிக்கவில்லை; வெள்ளாடை உடுத்திய துறவியாகி மடம் அமைக்காமல் சங்கம் அமைத்தவர் அவரே. மடம் என்பது துறவிகளுக்கு மட்டுமே உரியது. அதிலும் ஆண்களுக்கு மட்டுமே அங்கு இடமுண்டு. சங்கம் என்பது ஆடவர்க்கும், பெண்டிர்க்கும் பொதுவானது. பக்குவம் பெற்றவர்கள் பெறாதவர்கள் ஆகிய அனைவர்க்கும் அங்கு இடமுண்டு. இதற்காகத்தான் மடம் எனப் பெயரிடாமல் சங்கம் என்ற பெயரினை அவர் இட்டார். "தயை உடையார் எல்லோரும் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே" எனவும் "அருளுடையார் எல்லோரும் சமரச சன்மார்க்கம் அடைந்தவரே" எனவும் அவர் பாடிய பாடலடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அமைத்த சங்கத்திற்குத் தானே தலைவராகி விடவில்லை. "சுத்த சிவ சன்மார்க்க சங்கத் தலைவனே" என அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரையே சுத்த சன்மார்க்க சங்கத்தின் தலைவராக அவர் ஏற்றுக் கொண்டார்.

## தமிழ் நூல் புறக்கணிப்பு

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் அவருக்கு முன்பாகவும், பின்பாகவும் தமிழ்நாட்டில் சாதிப் பூசல்கள் மட்டுமல்ல, சமயப் பூசல்களும் மலிந்திருந்தன. இந்தப் பூசல்கள் தமிழ் இலக்கிய உலகிலும் ஊடுருவின.

சைவ மடங்களில் சைவ சமய நூல்களைத் தவிர, மற்ற நூல்களைப் படிக்கவோ, ஓதவோ கூடாது என்ற கடுமையான கட்டுப்பாடு நிலவியது. தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சீவகசிந்தாமணி, சூளாமணி போன்ற நூல்களைப் பயில்வது பயனற்றது எனக்கூறி அவற்றை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கும் போக்கு நிலவியது. வைணவ மடங்களிலும் சைவ சமய நூல்களைப் புறக்கணிக்கும் போக்கு நிலவியது.

இந்த வேண்டாத வெறுப்பின் விளைவாக மடங்களில் இருந்த பழந்தமிழ்ச் சுவடிகள் பல பேணுவாரின்றி அழிந்தன அல்லது அழிக்கப்பட்டன. மடங்களில் வடமொழிக்கு முதன்மை கொடுக்கும் போக்குக் காணப்பட்டது. தமிழ்மொழி தனித்து இயங்க வல்லமைப் படைத்தது அல்ல என்ற கருத்தோட்டமும் பரப்பப்பட்டது.

இத்தகைய சூழலில் வள்ளலார் அவர்கள் தமிழ்க் கொடியை உயர்த்திப் பிடித்தார். வள்ளலாரின் மொழிக் கோட்பாடு என்பது சைவ சமயம் சார்ந்ததாக இருக்கவில்லை. அவரின் கோட்பாடு தமிழ்த் தேசியம் சார்ந்ததாக அமைந்திருந்தது. மொழி சார்ந்த தன்மான உணர்வு மிக்கவராக அவர் திகழ்ந்தார். தமிழைத் தாழ்த்திப் பேசியவர்களின் நடுவில் தமிழின் உயர்தனிச் சிறப்பை உரக்கக் கூவினார். மிகத் தொன்மையான மொழி தமிழ் என்றும், உலக மொழிகள் பலவும் அதிலிருந்து கிளைத்தவை என்றும் கூறினார்.

> *இதிகாச புராணச் சொற்பொழிவுகளே பாமர மக்களுக்காக ஆற்றப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் முதன்முதலாக மக்களுக்காக திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் வள்ளலாரே ஆவார்.*

அவர் காலத்தில் வாழ்ந்த சங்கராச்சாரியார் “சமற்கிருதம் மாத்ருபாஜா” எனக் கூறியபோது “அவ்வாறாகின் தமிழ் “பித்ரு பாஜா” என ஆணித்தரமாகப் பதிலளித்தார். சமற்கிருதம் என்னும் தாய்மொழியிலிருந்துதான் பிறமொழிகள் பிறந்தன என்ற கூற்றை மறுக்கும் வகையிலேதான் தமிழ் தந்தை மொழி என வள்ளலார் பதிலடிக்கொடுத்தார். தந்தையில்லாமல் தாய் பிள்ளை பெற முடியாது தானே?.

## பற்றற்றவரின் தமிழ்ப் பற்று

உலகப் பற்றை துறந்தவரான வள்ளலார் அவர்கள் தமிழ்மொழியின் மீது மட்டும் என்றும் தணியாத பற்றுக்கொண்டிருந்தார். தமிழின் இனிமை குறித்தும் ஆரியம் முதலிய மொழிகளின் இன்னாமைக் குறித்தும் அவர் பின்வருமாறு கூறியது சிந்தையில் இருத்தத் தக்கதாகும்.ஸ்

ஆரியம் முதலிய மொழிகள் இடம்பத்தை உண்டுபண்ணுவன.
தமிழில் இடம்பம் இல்லை.
ஆரியம் முதலிய மொழிகள் ஆரவாரத்தை உண்டுபண்ணுவன.
தமிழில் ஆரவாரம் இல்லை.
ஆரியம் முதலிய மொழிகள் பிரயாசத்தை உண்டுபண்ணுவன.
தமிழில் பிரயாசை இல்லை.
ஆரியம் முதலிய மொழிகள் பெருமறைப்பை உண்டுபண்ணுவன.
தமிழ் மறைப்பில்லாதது. உள்ளதனை உள்ளபடி உணர்த்துவது.
ஆரியம் முதலிய மொழிகள் போது போக்கை உண்டுபண்ணுவன.
தமிழில் போது போக்குக்கு இடமில்லை.
தமிழ் பயிலுவதற்கு மிகவும் இலேசுடையது.
ஆரியம் முதலியவை பயிலுவதற்கு இலேசுடையனவன்று.
தமிழ் அறிதற்கு மிகவும் இலேசுடையது.
ஆரியம் முதலியவை அறிதற்கு இலேசுடையனவன்று.
தமிழ் பாடுதற்கு மிகவும் இனிமையுடையது.
ஆரியம் முதலியவை பாடுதற்கு இனிமையுடையனவன்று.
தமிழ் துதித்தற்கு மிகவும் இனிமையுடையது.
ஆரியம் முதலியவை துதித்தற்கு இனிமையுடையனவன்று.
தமிழ் சாகாக்கல்வியை இலேசில் அறிவிப்பது,
ஆரியம் முதலியவை சாகாக் கல்வியை அறிவிக்கா.
தமிழ் திருவருள் வலத்தாற் கிடைத்தது.
ஆரியம் முதலியவை திருவருள் வலத்தாற் கிடைத்தனவன்று.



தமிழ்மொழி மீது தன்னுடைய உள்ளம் பற்றுக்கொள்ளச் செய்ததற்காகவும், ஆரிய முதலிய மொழிகளிடம் ஒட்டாது தடுத்ததற்காகவும் இறைவனுக்கு அவர் நன்றி தெரிவிக்கிறார்.

19ஆம் நூற்றாண்டில் புலவர்களுக்கு மட்டுமே உரிமையாக இருந்த தமிழை எளிய மக்களுக்கும் உரிமையாக்கிய பெருமை வள்ளலார் அவர்களையே சாரும். மக்கள் பேசும் மொழியில் தனது பாடல்களை அவர் யாத்தார். தமிழ் உரைநடையின் வளர்ச்சியில் அவருடைய பங்களிப்பு என்பது ஈடு இணையில்லாததாகும்.

## பாரதியின் முன்னோடி

பாட்டுக்கொரு புலவன் பாரதி எனப் போற்றப்பட்ட சுப்பிரமணிய பாரதியாருக்கு முன்னோடியாகத் திகழ்ந்த பெருமைக்குரியவர் வள்ளலாரே. அவரின் திருவருட்பாவை நன்கு பயின்று அதன் சுவை நயத்தில் இன்புற்றவர் பாரதியார் என்பது அவருடைய பாடல் மூலமே வெளிப்படுகிறது. கோகலே சாமியார் குறித்து பாரதியார் பாடியுள்ள பாடல் இதற்குச் சான்றாகும். அப்பாடலின் தலைப்பில் பாரதி “களக்கமறப் பொதுநடம் நான் கண்டுகொண்ட தருணம்” என்று இராமலிங்க சுவாமிகள் பாடிய பாடலை திரித்துப் பாடியது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதிகாச புராணச் சொற்பொழிவுகளே பாமர மக்களுக்காக ஆற்றப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் முதன்முதலாக மக்களுக்காக திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் வள்ளலாரே ஆவார். அவர் காலத்திற்கு முன் பெரும் புலவர்கள் அதைக் கேட்கும் தரம் வாய்ந்தவர்களுக்கு மட்டுமே திருக்குறள் பாடம் நடத்தினார்கள். “திருக்குறள் ஒன்றுதான் தமிழர்களின் அறநெறிகளை எடுத்துணர்த்தும் நூல். அதை ஒவ்வொரு தமிழனும் பயில்வதின் மூலம் அவன் வாழ்க்கை மேலும் செம்மைப் பெறும். எல்லாவகையான மூடநம்பிக்கைகள் சாதி, சமய வேறுபாடுகள், சமுதாயக் கேடுகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு வாழ்வான்” எனக் கருதிய அவர் குறள் வகுப்புகளை நடத்தச் செய்தார்.

பிற்காலத்தில் தமிழ்ப் பற்றும், தமிழன் என்ற உணர்வும் பரவி ஓங்கும் மறுமலர்ச்சிக்கு வித்திட்டப் பெருமை வள்ளலாருக்கு உண்டு. தங்களைத் தாங்களே உணர்ந்து வளர்ந்தோங்க தமிழர்களுக்கு வழிகாட்டிய பெருமைக்குரியவர் வள்ளலார் அவர்களேயாவார். ●

நன்றி : புதுமலர் - கணகுறிஞ்சி

# என்.எல்.சி சுரங்க விரிவாக்கம் 2025ல் என்.எல்.சி.யை தனியாருக்கு விற்கும் சதி திட்டமே

- தங்ககுமரவேல்

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் எனப்படும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 1956இல் நிறுவப்பட்டது. இந்த நிறுவனத்தில் பழுப்பு நிலக்கரியும் அதை வைத்து மின்சாரமும் தயாரிக்கப்படுகிறது. இந் நிறுவனத்தின் ஆண்டு வருமானம் 8,672.84 கோடி ஆகும். இதன் நிகர வருமானம் 23.068.81 கோடி ஆகும். ஒன்றிய அரசு ரூபாய் 360 கோடி மதிப்புள்ள என் எல் சி யின் 3.56 சதவீத பங்குகளை விற்க முடிவு செய்தது. இப்பங்குகளை தமிழ் நாடு அரசின் ஐந்து பொதுத்துறை நிறுவனங்கள் வாங்கியுள்ளன.

இந்திய ஒன்றிய அரசின் சுரண்டல் நிறுவனமான என்.எல்.சி தமிழ்நாட்டில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரிக்கு எந்தவிதமான




ராயல்டியும் வழங்கப்படுவதில்லை. அனைத்தையும் இந்திய ஒன்றிய அரசே கபளீகரம் செய்கிறது. நெய்வேலி என்.எல்.சி முதல் சுரங்கத்தை விரிவாக்கம் செய்ய ஒன்பது கிராமங்களில் இருந்து மூவாயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலங்களையும் இரண்டாவது சுரங்கத்தை விரிவாக்கம் செய்ய 25 கிராமங்களிலிருந்து பத்தாயிரம் ஏக்கர் நிலங்களையும் மூன்றாவது சுரங்கத்திற்காக 26 கிராமங்களில் உள்ள 12 ஆயிரம் ஏக்கர் நிலங்களை பயன்படுத்த உள்ளது.

2023 மார்ச் 09ஆம் தேதி தேதி என்.எல்.சியின் இரண்டாவது சுரங்க விரிவாக்கத்திற்காக வளையமாதேவி கிராமத்து நிலங்களைக் கையகப்படுத்தி அவற்றைச் சமன்படுத்தும் வேலையில் என்.எல்.சி இறங்கியது. இதை எதிர்த்து மக்கள் கடும் போராட்டம் நடத்தினர். பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாதபடி காவல்துறை குவிக்கப்பட்டது. மக்களைக் காணச்சென்ற அரசியல் கட்சியினர் இயக்கத்தினர் கைது செய்யப்பட்டனர். இதனால் கோபப்பட்ட மக்களின் போராட்டம் வெடித்து கடையடைப்பு உள்ளிட்ட பெரும் போராட்டங்கள் கடலூர் மாவட்டத்தையே திகைக்க வைத்தன. என்.எல்.சி சுரங்க விரிவாக்கத்தை உடனே கைவிட வேண்டும் என்பதுதான் மக்களின் ஒற்றைக் கோரிக்கையாகும்.

ஆண்டுக்கு ரூபாய் 11 ஆயிரம் கோடி வருமானம் ஈட்டும் என்.எல்.சியின் இலாபம் மட்டும் 2ஆயிரம் கோடி ஆகும். நிலம் வழங்கியவர்களுக்கு இலாபத்தில் ஒரு பகுதி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஆனால் அதைச் செய்யாமல் ஸ்என்.எல்.சி நிறுவனம் இலாபத்தை வட மாநிலங்களில் முதலீடு செய்கிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 45 ஆயிரம் கோடி வருவாய் ஈட்டிய என்.எல்.சி கடலூர் மாவட்டத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்ய 447 கோடி மட்டுமே ஒதுக்கி உள்ளது. இது வெறும் ஒரு சதவீதம் மட்டுமே ஆகும்.

மேலும் என்.எல்.சிக்கு நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை வாய்ப்பு சரியாக வழங்கப்படுவதில்லை. இதுவரை 37,256 ஏக்கர் நிலத்தை என்.எல்.சி க்குக் கொடுத்த 25 ஆயிரம் குடும்பங்களுக்கு போதிய இழப்பீடு வழங்கப்பட வில்லை. அக் குடும்பங்களைச் சேர்ந்த 1827 பேருக்கு மட்டும்தான் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்களும்

ஓய்வுபெற்று விட்டனர். இப்போது 3500 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். கடந்த ஆண்டு என்.எல். சியில் நிரந்தரப் பொறியாளர்களாகப் பணியமர்த்தப்பட்ட 299 பேரில் ஒருவர்கூட தமிழர் இல்லை.

நெய்வேலியில் நிலக்கரி நிறுவனம் தொடங்குவதற்கு முன்பு 10 அடியில் இருந்த நிலத்தடி நீர்மட்டம் இப்போது 1000 அடிக்குக் கீழ் சென்றுள்ளது. என்.எல்.சி நிறுவனம் நிலத்தடி நீரை ராட்சதக் குழாய்கள் மூலம் உறிஞ்சி கடலில் வெளியேற்றுவதால் 8 கிலோமீட்டர் அளவுக்குக் கடல்நீர் நிலத்தடியில் புகுந்துள்ளது. என்.எல்.சியால் ஏற்படும் ஆஸ்துமா, நுரையீரல் பிரச்சனைகளால் கடலூர் மக்கள் அவதிப் படுகின்றனர். தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையைவிட நூறு மடங்கு பிரச்சனை என்.எல்.சியால் ஏற்படுகிறது. என்.எல்.சியால் ஏற்படும் காற்று மாசு, நிலத்தடி நீர்மட்டம் சரிவு போன்றவற்றால் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், மயிலாடுதுறை ஆகிய ஐந்து மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும். என்.எல்.சிக்காக 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டால் 17 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். நெல், கரும்பு, வாழை. முட்டைக்கோஸ் போன்ற பயிர்களின் மூலம் ஏக்கர் ஒன்றிற்கு ஆண்டுக்குப் பத்து இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டித்தரும் நிலங்களே அவையாகும்.

தமிழ்நாட்டில் ஒரு நாள் மின்சாரத் தேவை 18 ஆயிரம் மெகாவாட் முதல் 22 ஆயிரம் மெகாவாட் ஆகும். என்.எல்.சி இரண்டாயிரம் மெகாவாட் மின்சாரம்தான் தயாரிக்கிறது. அதில் தமிழ்நாட்டிற்கு 800 மெகாவாட் மட்டுமே கிடைக்கிறது. மீதி ஒன்றிய அரசு எடுத்துக்கொள்கிறது.

ஒடிசா, உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், இராஜஸ்தான் போன்ற வட மாநிலங்களின் மக்கள் நலன் திட்டங்களுக்கு இலாபத்தின் பகுதியை செலவழிக்கும் என்.எல்.சிநிறுவனம் தமிழ்நாட்டின் நலனுக்கோ, நிலம் கொடுத்த கடலூர் மக்களுக்கோ எதுவும் செய்யவில்லை. கடந்த பத்து ஆண்டுகளில் குஜராத், ஒடிசா, உத்திரப்பிரதேசம், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் 55ஆயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்த என்.எல்.சி தமிழ்நாட்டில் ஒரு முதலீடும் செய்யவில்லை.

2025ஆம் ஆண்டு இந்திய ஒன்றிய அரசால் என்.எல்.சி தனியாருக்கு விற்கப்பட உள்ளது. இரண்டாவது சுரங்கத்திற்காக 1985 இல் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் 10 ஆயிரம் ஏக்கர் 37 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளது. இதில் 40 ஆண்டுகளுக்கு பழுப்பு நிலக்கரி எடுக்கலாம். இந்த நிலையில் தற்போது கையகப்படுத்தப்படும் 25ஆயிரம் ஏக்கர் நிலங்களையும் சேர்த்து தனியாருக்குத் தாரைவார்ப்பதே இந்திய ஒன்றிய அரசின் திட்டமாகும்.

இதை இப்போதே தடுத்து நிறுத்தாவிட்டால் தமிழ்நாட்டின் வளங்கள் யாவும் நம் கண்முன்னே பறிபோய் தமிழ்நாடு பாலைவனமாவது உறுதி. எனவே நமது ஒன்றுபட்ட போராட்டமே தமிழ்நாட்டின் வளங்களைக் காக்கும். கொள்ளை போகும் வளங்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால் கார்ப்பரேட் அடிவருடி அரசுகளை நம்பிப் பயனில்லை. ஒட்டுமொத்த மக்கள் புரட்சியின் வாயிலாக உலகமயமாக்கல் என்னும் சுரண்டல் பொருளாதாரக் கொள்கையைத் கட்டமைக்கும் தூக்கி எறிந்து சோசலிசப் ஒரு புரட்சிகர பொருளாதாரத்தைக் அரசை ஏற்படுத்துவதற்கு மக்களை தயார்படுத்துவதே நமது தலையாய கடமையாகும். ●





# பொது பாடத் திட்டம்

## மக்கள் கல்விக் கூட்டு இயக்க அறிக்கை



பேராசிரியர் வி.சிவராமன்

தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஒரே மாதிரியான பாடத்திட்ட முறையை கடை பிடிக்க வேண்டும் என்று உயர்கல்வி மன்றம் அறிவித்துள்ளது, இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில் பொதுப்பாடத்திட்டம் இக்கல்வியாண்டு முதலே நடைமுறைக்கு வரும் என்று உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் அறிவித்துள்ளார். இது கல்விப் பரப்பில் ஜனநாயகத்தை மறுக்கும் செயல் என மக்கள் கல்விக் கூட்டியக்கம் வன்மையாக கண்டிக்கிறது. இந்த திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது. தமிழ்நாட்டிற்கென தனித்துவமான கல்விக் கொள்கை உருவாகிவரும் வேளையில் பொதுப் பாடதிட்டம் என்ற அறிவிப்பை செய்து அதனை அவசரகதியில் திணிப்பது ஏன்? தமிழக அரசு தேசிய கல்விக்கொள்கையை எதிர்ப்பதாகக் கூறினாலும் அதன் பரிந்துரை களை அமுல்படுத்துவது ஏன்?

உயர் கல்வி அமைச்சர் மாண்புமிகு க.பொன்முடி அவர்கள் பொதுக் கல்வி திட்டத்தினால் மாணவர்கள் இடமாறுதலாகி வேறு சுல்வி நிலையங்களில் படிப்பை தொடர இது உதவியாக இருக்கும் என்று சொல்கிறார். இது ஏற்கத்தக்க வாதம் அல்ல. பொதுவாக இடமாறுதலாகும் மாணவர் களுக்கு சமநிலை சான்றிதழ் (equivalence certificate) வழங்கப்படுகிறது. அவர்கள் வேறு கல்வி நிறுவனத்தில் சேர்வதும் பெரும் பிரச்சனையாக இல்லை. இது குறித்த புகார்களோ பெரியளவில் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. இதைக் காரணம் காட்டி கல்வித்துறையில் ஜனநாயக தன்மையை முற்றிலுமாக ஒழிப்பதை ஏற்கமுடியாது.

உலகம் முழுவதும் மாறிவரும் சமூக, பண்பாட்டு மற்றும் பொருளாதார சூழலுக்கேற்ப கல்வித்துறையில் புதுப் புது துறைகள் உருவாகி வருகின்றன. அவற்றிற்கேற்ற பாடத்திட்டங்களை பல்கலைக் கழகங்கள் தங்களுடைய பிரத்யேக கல்வித்திட்டக் குழுக்கள் மூலம் தகுந்த வல்லுனர்களைக் கொண்டு உருவாக்கி கல்விப்பேரவை, ஆட்சிக்குழு போன்ற பல அடுக்குகளில் விவாதித்து நடைமுறைக்குக் கொண்டு வருகின்றன. பல்கலைக் கழக மானியக் குழுவே கூட பாடத்திட்டங்களின் வடிவமைப்பை மட்டுமே வழிகாட்டுதலாக முன்வைக்குமே தவிர, அதை அப்படியே கடை பிடிக்க



வலியுறுத்துவதில்லை. தமிழகத்தில்தான் அதிக அளவில் தன்னாட்சிக் கல்லூரிகள் உள்ளன. அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புத்தகுதியே புதுமையான மற்றும் தரமான பாடத்திட்டங்களை உருவாக்கி, கற்பிக்கப்படலாம் என்பதுதான் அகில இந்திய அளவிலான தரவரிசையில் மூன்றாம் இடம் பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ள மாநிலக் கல்லூரி ஒரு தன்னாட்சிப் பெற்றக் கல்லூரிதான். அரசின் இந்த பொதுப்பாடத்திட்ட முடிவு இதன் தனித்துவத்தை நிச்சயம் பாதிக்கும்.

தமிழகத்தில் ஒரு புறம் தன்னாட்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கையை அதிகரிப் பதும், மறுபுறம் பாடத்திட்டத்தில் தன்னாட்சியை மறுப்பதும் குழப்ப நிலையை ஏற்படுத்தும். தமிழகத்தில் உயர்கல்வியின் தரத்தை மிகவும் பாதிக்கும் என எச்சரிக்கிறோம். தமிழ், ஆங்கிலம் என மொழிப்பாடங்களிலும் ஒரே பாடத்திட்டம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த முடிவை எடுப்பதற்கு முன்னதாக அது தொடர்பான கருத்து




கேட்பு கூட்டத்தை தமிழக அரசோ, தமிழக உயர்கல்வி மன்றமோ நடத்தவில்லை. பாட திட்ட வடிவமைப்பில் பல வல்லுனர்களின் பங்கேற்பு மறுக்கப்பட்டு, சிலர் மட்டுமே ஒட்டுமொத்த தமிழகத்தின் உயர்கல்வி பாடத்திட்டங்களை உருவாக்கும் சர்வாதிகார அமைப்பு உருவாவதற்கு இது வழி வகுக்கும். இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

எனவே தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை உடனடியாக திரும்பப்பெற வேண்டும். அதுமட்டுமின்றி தமிழ்நாட்டின் தனித்துவமான கல்விக் கொள்கை உருவாகும் வரை கல்வித் திட்டங்களில் வலியுறுத்துகிறோம். எவ்வித மாற்றங்களும் செய்யக் கூடாது என மாணவர்களுக்கு தரமான உயர்க் கல்வியை வழங்கும் ஆக்கப்பூர்வமான பணியில் தமிழ்நாடு அரசு கவனத்தை குவித்து செயல்பட வேண்டும் என எதிர்ப்பார்க்கிறோம். அந்த வகையில், தற்போது அரசுப் பல்கலைக் கழகங்கள். கல்லூரிகளில் காலியாக ‘உள்ள 7 ஆயிரத்திற்குமேற்பட்ட காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அடிப்படை பணியாளர்களை நிரந்தர நியமித்து கல்லூரி மற்றும் மாணவர்கள் சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் கௌரவ விரிவுரையாளர்களை வைத்துத்தான்




கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பற்றாக் குறையை ஈடுகட்ட முடியும் என்ற நிலை நீடிக்கிறது. ஆனால் அவர்களுக்கான சம்பளம் ஒரு கொத்தனார் வாங்குவதைவிடக் குறைவுதான். அண்டை மாநிலங்களில் சுமார் ரூ.40 ஆயிரம் முதல் ரூ.57,500 வரை சம்பளம் வழங்கப்படும்போது. தமிழகத்தில் வெறும் 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்ட நிலையில் தற்போது 5 ஆயிரம் உயர்த்துவதாக அமைச்சர் அறிவித்திருப்பது ஏற்புடையதல்ல. கௌவுரவ விரிவுரையாளர்களை கொத்தடிமைகளைப் போல் பயன்படுத்தி வரும் அவலத்திற்கு உடனே முடிவு கட்டி யு.ஜி.சி அறிவித்துள்ள ரூ.57, 500 வழங்கி அவர்களுக்கு பணிப்பாதுகாப்பு வழங்க வேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் மூலம் கௌரவ விரிவுரையாளர்களை நியமிக்கும் தவறான முறையை முற்றிலுமாக தடுக்க வேண்டும். அதேபோல் தனியார் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையை தடுத்துநிறுத்த வேண்டும். மேலும் அங்கு பணியாற்றக் கூடிய பேராசிரியர்களின் ஊதியத்தை அரசே நிர்ணயித்து அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். தேசிய கல்விக் கொள்கை 2020 யை முற்றிலுமாக நிராகரித்தல், தமிழ்நாட்டிற்கென தனித்துவமான கல்விக் கொள்கை உருவாக்கப்படுவதற்கு ஆதரவளிப்பது உள்ளிட்ட நோக்கங்களைக் கொண்டு கடந்த ஜூலை 8 ந்தேதி சென்னையில் கல்வியாளர்கள், மாணவர் அமைப்பு பிரதிநி திகள், கல்வியில் அக்கறையுள்ள பல்வேறு இயக்கப் பிரதிநிதிகள் ஒன்று கூடி விவாதித்து “மக்கள் கல்விக் கூட்டியக்கம்“ எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து 26.07,2023 புதன்கிழமை காலை 11.30 மணிக்கு சேப்பாக்கம் பத்திரிக்கையாளர் மன்றத்தில் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடந்தது. ●

**‘‘தமிழகத்தில் தான் அதிக அளவில் தன்னாட்சிக் கல்லூரிகள் உள்ளன. அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புத்தகுதியே புதுமையான மற்றும் தரமான பாடத்திட்டங்களை உருவாக்கி, கற்பிக்கப்படலாம் என்பதுதான்.’’**



# ஆறாம் திருமுறை இருட்டடிக்கப்படுவது ஏன்?

விடுதலை இராசேந்திரன்

சைவத்தில் பற்று வைத்துப் பிறகு சிந்தனை வளர்ச்சிப் போக்கில் சைவத்தின் மனித சமத்துவ எதிர்ப்புக் கருத்துக்களை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியதுதான் வள்ளலாரின் தனித்துவம். அவர் சுய மத மறுப்பாளர். சைவத்துடனேயே அவர் வாழ்நாள் முழுதும் போராட வேண்டியிருந்தது.

“நாம் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனினும் இலட்சியம் வைக்க வேண்டாம்“. இதுதான் தனது கடைசி பத்தாண்டுகளில் வள்ளலார் மக்களிடம் முன்வைத்த வேண்டுகோள்; அது மட்டுமல்ல சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம்“ என்று அனைத்து மதங்களையும் அதன் தத்துவங்களையும் எதிர்த்த புரட்சிக்காரராக அவர் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலம் 51 ஆண்டுகள். ஆனால் தனது ஆறாம் திருமுறையில் அவர் எழுதிய புரட்சிக் கருத்துக்கள் இன்று வரை இருட்டடிக்கப்படுகின்றன,

“ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்“; “கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவே: ‘அம்பலத்தரசே அருமருந்தே ஆனந்தத்தேனே. அருள் விருந்தே”; “அருட்ஜோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்“: “அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்“ போன்ற பாடல்களோடு “அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை” என்று மங்கலம் பாடி அவரது சீடர்கள் பலரும் முடித்து விடுகிறார்கள். வரலாற்றில் பார்ப்பனியம் தனது எதிர்ப்பு சிந்தனைகளை ஜீரணித்து ஏப்பம் விட்ட சதிகளுக்கு இது மற்றொரு சான்று.

**சமய மறுப்பு தெய்வ உருவம். சடங்கு மறுப்பு சன்மார்க்கத்தின் கோட்பாடு, என்று 1872 லேயே துணிவோடு அறிவித்த வள்ளலாரை வைதீகம் எப்படி ஏற்கும்?**

1872இல் ஞானசபையை உருவாக்கிய அவர் அதற்கான விதிகளில் ஜாதி மறுப்பு, சமய மறுப்புகளை உள்ளடக்கமாக்கினார். வள்ளலார் தொடக்க காலங்களில், சைவப் பற்றோடு தாம் எழுதிய பாடல்களை அச்சு ஏற்றவே விரும்பவில்லை. ஆனால், மக்களிடத்தில் அதற்கு மிகவும் செல்வாக்கு இருந்தது. இறுக்கம் இரத்தின முதலியார் அவரது பாடல்களைத் தொகுக்க விரும்பி அடிகளாரின் சம்மதம் பெற பெரும் போராட்டமே நடத்த வேண்டி இருந்தது. ஒரு கட்டத்தில் அடிகளார் தனது பாடல்களை அனுப்பி ஒப்புதல் தரும் வரை, தாம் ஒரு வேளை உணவை மட்டுமே உட்கொள்ள முடிவு எடுத்திருப்பதாக அடிகளாருக்கு கடிதம் எழுதினார். இதற்குப் பதறிப் போய் பதில் எழுதிய வள்ளலார், “தங்களது பட்டினி அறிவிப்பு தன்னை பாதித்தது என்றும். தாம் உண்ணும் உணவு உடம்பில் ஒட்ட மறுக்கிறது என்றும் இரண்டு மாதங்களில் பாடல்களை அனுப்பி வைப்பதாக” பதில் எழுதுகிறார். இவ்வளவு ஆர்வமும், துடிப்பும் உடைய இரத்தின முதலியார். ஆறாம் திருமுறையை பதிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. பழமைவாதிகளுக்கு ஆறாம் திருமுறை அதிர்ச்சி வைத்தியமாகிவிட்டது.

கடவுள் வழிபாடு என்பது. சடங்குகள், யாகங்கள், வேண்டுதல்களில் இல்லை. மனிதர்களுக்கு மனிதர்கள் உதவும் ‘ஜீவகாருண்யம்‘ தான் கடவுள் வழிபாடு. அநுதான், சன்மார்க்கம்“ என்றார். தமிழ்ச் சிந்தனை மரபில் இப்படி மனிதத்தைக் கடவுளாக்கிய வேறு சிந்தனையாளர் ஒருவர் கூட இல்லை. அதே போல் ‘பசித்த வயிற்றுக்கு உணவு இடு’ என்று வேத மத மரபில் எந்த ரிஷியும், அவதாரமும், எந்த வேதமும், புராணமும், மகான்களும் கூறிய சான்றுகளே இல்லை.

இன்னும் ஒரு படி மேலே போய் தனது சன்மார்க்க நெறிக்கு அவர் தரும் விளக்கம் கடவுள், மதம் மறுப்பாகவே இருக்கிறது. உபதேசக் குறிப்புகளில் அவர் இவ்வாறு எழுதுகிறார்,

“சமயத் தெய்வங்களில் வழிபாடு செய்து அந்த சமயத் தெய்வங்களை பெற்றுக் கொண்ட அற்ப சித்தியில் அவர்கள் மயங்கி மகிழ்ந்து அகங்கரித்து மேலேற வேண்டிய படிகள் எல்லாம் ஏறி பூரண சித்தியை அடையாமல், தடைப்பட்டு நிற்றல் நில்லாமல் சர்வ சித்தியை

அடைய கடவுள் ஒருவர் உண்டென்றும் அவரை உண்மையின் பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெற வேண்டும் என்பதே சன்மார்க்க சங்கத்தின் கோட்பாடு" என்கிறார்.

சமய மறுப்பு தெய்வ உருவம். சடங்கு மறுப்பு சன்மார்க்கத்தின் கோட்பாடு, என்று 1872 லேயே துணிவோடு அறிவித்த வள்ளலாரை வைதீகம் எப்படி ஏற்கும்?

வள்ளலார் தனது பாடல் தொகுப்புக்கு பெயர் எதுவும் சூட்டவில்லை; அவரது முதன்மை சீடரான வேலாயுத முதலியார் தான் 'திருவருட்பா' எனப் பெயர் சூட்டினார். தெய்வத் தன்மை கொண்ட பாடல்கள் என்ற பொருளிலே அப்பெயர் சூட்டப் பெற்றது. ஆறு திருமுறைகளாகத் தொகுத்ததும் அவரே; 'நிருமுறை' என்றால் 'பகுதி' என்று பொருள். இதில் தனது புரட்சிக்கரக் கருத்துக்களை பதிவு செய்த இறுதிக்கால பாடல்கள் ஆறாம் திருமுறையாக தொகுக்கப் பெற்றாலும் அதை உடனடியாக வெளியிட வேண்டாம் என்பதே அடிகளாரின் கருத்து . முதலில் வெளிவந்தது அய்ந்து திருமுறைகள் தான். 13 ஆண்டுகள் கழித்து 1880 இல் வள்ளலார் மறைவுக்குப் பிறகு தான் 6 ஆம் திருமுறை வெளிவந்தது.



அய்ந்து திருமுறைகளை வெளியிட்ட வேலாயுதம் முதலியார். ஆறாம் திருமுறையை வெளியிட ஆர்வம் காட்டாமைக்குக் காரணம் அவரது பழமையில் ஊறிய சைவப்பற்று தான். அது மட்டுமல்ல. முதல் 5 தொகுதிகள் வெளி வருவதில் பேரார்வம் காட்டிய இறுக்கம் இரத்தினம். புதுவை வேலு முதலியார். சிவாநந்தபுரம் செல்வராய முதலியார், பொருள் உதவி செய்த சோமசுந்தரம் செட்டியார் ஆகியோரும் 6ஆம் திருமுறை வெளி வருவதில் ஆர்வமின்றி ஒதுங்கி விட்டனர். ஏதோ, வள்ளலார் கேட்டுக் கொண்டதற்காக அவருக்கு அஞ்சி வேலாயுத முதலியார் அவர் உயிருடன் இருக்கும் வரை வெளியிடவில்லை என்று ம.பொ.சிவஞானம் (மபொசி) எழுதுவது உண்மைக்கு மாறானது என்கிறார். ஆய்வாளர் சரவணன், வள்ளலாருக்கே 6ஆம் திருமுறையில் உடன்பாடு இல்லை என்ற ஒரு பொய்த் தோற்றத்தை உருவாக்குவநே ம.பொ.சி.யின் உள் நோக்கம். உண்மை என்னவென்றால் வேலாயுத முதலியார் வாழ்ந்த காலத்திலேயே 1885இல் ஆறாம் திருமுறை வெளியிடப்பட்டு விட்டது. 1889இல் தான் முதலியார் மரணமடைகிறார். வேலாயுத முதலியாருக்கு அச்சிட மனமில்லாத காரணத்தால் வேலூர் பத்மநாப முதலியார் வெளியிட்டார் என்கிறார் ஆய்வாளர் பா.சரவணன்.

இந்தப் பின்னணியில் அடிகளாரின் திருவருட்பாவிற்குப் பழமையில் ஊறிப்போன தீவிர சைவர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு வந்தது, அதில் முதல் வரிசையில் நின்றவர் யாழ்ப்பாணத்தில் பிறந்த ஆறுமுக நாவலர், தமிழகத்தோடு குறிப்பாக சிதம்பரம் கோயிலோடு நெருக்கமாக இருந்தார்; ஐந்து முறை தமிழகம் வந்த அவர் சிதம்பரத்திலேயே தங்கி 'சைவ பிரகாச வித்யா சாலை' எனும் பாடசாலையை நிறுவினார்.வேதத்தை விட ஆகமம் உயர்ந்தது. ஆகமம் சைவத்திற்கே உரியது என்ற கருத்துடைய அவர் தில்லை தீட்சிதர்களைக் கடுமையாக சாடியவர். அவர்கள் சிவ தீட்சை பெறாதவர்கள் அவர்கள் கையில் இருந்து விபூதி வாங்கக் கூடாது. அவர்களுக்கு பூஜைகள் நடத்தும் உரிமை கிடையாது என்று கடுமையாக எதிர்த்தார். இதனால் தீட்சிதப் பார்ப்பனர்கள் நாவலர் மீது பகைக் கொண்டனர். நாவலருக்கு எதிராக போலியான அர்ச்சகர்களை உருவாக்கி அவர் மீது சேறு வாரித் தூற்றி இழிப் பிரச்சாரங்களைச் செய்தனர். நாவலர் தீட்சிதர்களுக்குப் பதிலடி தந்து வந்தார். அதே நாவலர் வள்ளலாரின் பாடல்கள் 'திருவருட்பா' அல்ல என்று மறுத்தார். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் எனும் ஐந்து புராணங்கள் தான் திருவருட்பாவே தவிர மற்றவை அல்ல என்றார். வள்ளலார் பாடல்களை நேரடியாகக் கண்டித்து மருட்பா என்றார். பார்ப்பனர்களைக் கடுமையாகச் சாடும் திருமந்திரத்தையே அருட்பாப் பட்டியலில் சேர்க்காதவர் அவர்.

ஆறுமுக நாவலர் கருத்துக்கு எதிராக 1968இல் 'திருவருட்பா தூசன பரிகாரம்' எனும் நூலைத் திருமயிலை சண்முகம் பிள்ளை என்பவர் எழுதி வெளியிட்டார். அருட்பா மருட்பா விவாதங்கள் அனல் பறக்கத் தொடங்கின; அடிகளாருக்கு ஆதரவாக அட்டாவதனம் வீராசாமி செட்டியார், இறுக்கம் இரத்தினம் முதலியார். பூவை கல்யாணசுந்தர முதலியார், செய்கு தம்பிப் பாவலர் உள்ளிட்ட சுமார் 23 பேர் களமிறங்கினர். மருட்பாவுக்காகக் களமிறங்கியவர்களில் திருவாடுதுறை வேதாரண்யம், திருவண்ணாமலை மற்றும் தருமபுரம் ஆதீனங்கள் உவே சாமிநாதையர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, நா. கதிரைவேற் பிள்ளை, திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் உள்ளிட்ட சுமார் 15 பேர்.

அருட்பா, எதிர் மருட்பா மோதல் குறித்துப் பல

உண்மைக்கு மாறான தகவல்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை சுருக்கமாக இவ்வாறு பட்டியவிடலாம்.

ஆறுமுக நாவலர், கதிரை வேற்பிள்ளை முதலியோர் வள்ளலாரைத் தனிப்பட்ட முறையில் இழிவு செய்யும் பரப்புரையில் இறங்கினர். அவர் பிறந்த, 'கருணீகர்' என்ற பிரிவு சைவத்தில் கீழானது என்று ஜாதிகளின் அடிப்படையிலும், இழிவு செய்தனர்.
ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை கடுமையாக விமர்சித்துத் துண்டுப்
பிரச்சாரங்கள், நூல்கள் எழுதி வெளியிட்டனர்.

தன்னை 'சாமி' என்றோ, 'அடிகள் என்றோ அழைப்பதை வள்ளலார் விரும்பவில்லை. தனது பாடல் தொகுப்பை வேலாயுத முதலியார் அந்தப் பெயர்களோடு வெளியிட்ட போது அதில். கடும் கோபமடைந்த வள்ளலார். இராமலிங்கம் பிள்ளை என்று மட்டுமே தனது பெயரைப் போட வேண்டும் என்றார். ஆனால் தனக்குத் தானே 'சாமி' என்று தற்பெருமையோடு பெயர் சூட்டிக் கொண்டதாக கதிரை வேற்பிள்ளை போன்றவர்கள் பிரச்சாரம் செய்தார்கள்.



அப்பர், சம்மந்தர், நாவுக்கரசர் போன்றவர்கள் அறிவியலுக்கு எதிரான 'வித்தை'களைக் காட்டிச் சைவத்துக்கு இழுத்தது போல வள்ளலாரும் செத்தவரை எழுப்பினார் என்ற கதையும் உண்டு. ஆறுமுக நாவலர், வள்ளலார் மோசடி வித்தைகளைச் செய்கிறார் என்பதை மட்டும் கண்டித்தார். அப்பர், சம்பந்தர்களைக் கண்டிக்கவில்லை.

தில்லை தீட்சிதர்களுக்கும் வள்ளலாருக்கும் இடையே பல முரண்பாடுகள் உண்டு. சிதம்பரத்தில் நிலையாகத் தங்காமல் அவர் வெளியேறியதற்கு அடிப்படையான காரணம் தீட்சிதர்கள் மீது அவர் கொண்டிருந்த மாறுபாடுகளும், வெறுப்பும்தான். அதே நேரத்தில் தீட்சிதர்களை நேரடியாகக் கண்டித்த ஆறுமுகநாவலரைப் பழிவாங்க, வள்ளலாரை, தீட்சிதர்கள் பயன்படுத்த முயன்றனர். சிதம்பரம் பேரம்பலத்தில் ஆறுமுக நாவலருக்கு எதிராக தீட்சதர்கள் திரண்டு, அதில் உரையாற்ற வள்ளலாரை அழைத்தனர் (1869ஜூன் 7ஆம் நாள்.)

பேரம்பலக் கூட்டத்தில் என்ன நடந்தது என்பதை 'ஃபிரிமேன்' பத்திரிகை ( 1869 டிசம். 16 ) விரிவாகப் பதிவு செய்தது. வள்ளலார் பேசும்போது, *ஆறுமுகநாவலரின் 'நாவலர்' பட்டம் குறித்துக் கடுமையாக விமர்சனம் செய்தார். நா ஒ அலர் எனப் பிரித்து பொய்யர்; நாவில் பழி சொல் உடையவர் எனப் பலவாறு பொருள் உண்டு என்று பேசினார். அப்போது ஈசான சிவாச்சாரியார் என்பவர் எழுந்து உங்கள் கருத்துப்படி தான் திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் பட்டம் தந்ததா? என்று எதிர் கேள்வி கேட்டார்.

அப்போது தலைமை தீட்சிதர் சபா நடேசர் ஆவேசத்துடன் ஆறுமுகநாவலர் இருக்கும் இடத்துக்குச் சென்று, அவரை இழுத்துக் கொண்டு வந்து நய்யப்புடைப்பதற்குத் தாம் விரும்புவதாகவும் மற்றவர்கள் தமக்கு உதவியாய் வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ஆயினும் எவரும் போகவில்லை" என்று அந்த ஏடு பதிவு செய்துள்ளது. இந்த இரண்டு நிகழ்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆறுமுக நாவலர் கடலூர் மஞ்சக் குப்பம் நீதிமன்றத்தில் தீட்சதர். இராமலிங்கர் உள்ளிட்ட ஆறுபேர் மீது வழக்குத் தொடர்ந்தார். (தீட்சிதப் பார்ப்பனர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியினையும் விவாதத்தை வன்முறையாக மாற்றத் துடித்ததையும் இதிலிருந்து உணர முடியும்). வழக்குப் பற்றிய முழுமையான சரியான பதிவுகள் இல்லை என்கிறார் ஆய்வாளர் ப. சரவணன். இதில் வள்ளலார் மீது தொடரப்பட்டது மான நட்ட வழக்கு. தீட்சிதர்கள் மீது மான நட்டம் மற்றும் அச்சுறுத்தல் வழக்குகள். தீர்ப்பில் நான்கு தீட்சிதர்களும் விடுவிக்கப்பட்டனர். வள்ளலாரும் விடுவிக்கப்பட்டார். முதல் எதிரி சபாநடேசர்

தீட்சதருக்கு ரூ. 50 அபராதம் தவறினால் ஒரு மாதம் சிறை: தீர்ப்பு வழங்கிய நீதிபதி ரோபார்ட்ஸ். தீர்ப்பு வழங்கியது முத்துசாமி அய்யர் என்பது தவறான வதந்தி,

முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய சேதி வழக்கு அருட்பா எதிர்மருட்பா தொடர்பானது அல்ல. மான நட்ட வழக்கு என்பதுதான் உண்மை. ஆனால் வையாபுரிப் பிள்ளை, மா.பொ.சி. மற்றும் குமுதம் ஏட்டில் தொடர் எழுதிய துமிலன் போன்றவர்கள் இராமலிங்கர் எழுதியது அருட்பா இல்லை என்பதற்காகவே வழக்கு தொடரப்பட்டதாகக் கற்பனையான கதைகளை வரலாறுகளாக எழுதி வைத்துள்ளனர். அதுவும் சாகித்ய அகாடமி பரிசு பெற்ற தனது 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' நூலிலேயே தவறான தகவலைப் பதிவு செய்துள்ளார் ம.பொ.சி. நாவலர் என்ற சொல்லுக்கு இராமலிங்கர் தந்த பொருள் விளக்கம் தீட்சதர்கள் தந்த அழுத்தத்தினால் தான்; பேரம்பலக் கூட்டத்தில் நாவலர் சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருமாறு தீட்சதர்கள் கேட்டதால் அது குறித்து மட்டுமே பேசினார். வேறு எதுவும் ஆறுமுக நாவலர் பற்றி இராமலிங்கர் பேசவில்லை என்றும், ஈசான சிவாச்சாரியார் தன்னை நோக்கிக் கேள்வி எழுப்பிய போதும் வள்ளலார் கண்மூடி அமைதியே காந்தார்' என்றும் தனஞ் செய இராச சிங்கம் தனது நூவில் பதிவு செய்துள்ளார்.

மேலே விவரிக்கப்பட்டது முதற்கட்ட போராட்டம் தான். அதற்குப் பிறகு ஆறுமுகநாவலரின் மாணவர் ந. கதிரைவேற்பிள்ளை இருபது ஆண்டுகள் கழித்து, இப்போராட்டத்தை மீண்டும் 1903இல் தொடங்கினார்.

வள்ளலார் குறித்துக் கதிரைவேற்பிள்ளை தவறாகப் பல நூல்களை எழுதினார். அதற்காக வள்ளலாரின் தமயன் மகன் வடிவேலுப் பிள்ளை அவர் மீது மான நட்ட வழக்குத் தொடர்ந்தார். உ.வே.சாமிநாத அய்யர் மற்றும் கதிரை வேற்பிள்ளையால் சிதம்பரத்திலிருந்து, திரட்டி வரப்பட்டவர்களும் திரு.வி.க.வும் வள்ளலாருக்கு எதிராகச் சாட்சி கூறினார்கள்.

சாட்சி கூற வந்ததால் திரு.வி.க. தேர்வு எழுத முடியாமல் அவரது உயர்கல்வி தடைபட்டது என்று ம.பொ.சி. இதிலும் உண்மைக்கு மாறான கருத்தை எழுதிப் பரப்பினார். உண்மையில் கதிரைவேற் பிள்ளைக்கும் வில்வபதி செட்டியார் என்பவருக்கும் நடந்த அடிதடிச் சண்டை தொடர்பான வழக்கில் சாட்சி கூறப் போனதாலேயே திரு.வி.க. தனது உயர்கல்வியைத் தொடர முடியவில்லை.

வழக்கின் தீர்ப்பு கதிரைவேற்பிள்ளைக்குச் சாதகமாகவே இருந்தது உண்மைதான்: ஆனாலும் சாட்சியங்களாக வள்ளலாருக்கு எதிராக எழுதப்பட்ட நூல்கள் என்று கதிரைவேற்பிள்ளை முன் வைத்தது அவரே எழுதிய நூல்கள் தான். அவர் சாட்சிக்கு வைத்த பல நூல்கள் அச்சிடப்படவேயில்லை. ( உ.ம் குதர்க்காரணிய நாச மகா பரசு கண்டனம் மறைமலையடிகளும் செய்கு தம்பிப் பாவலரும் பிறப்பால் ஓர் இஸ்லாமியர் 1. வள்ளலார் பக்கமே நின்று நியாயங்களைப் பேசினர்.)

வள்ளலார் தொடங்கிய ஞான சபையில் இணைந்த பலரும் தனது கொள்கைகளுக்கு நேர்மாறாகச் செயல்படுவதை உணர்ந்த அவர், சபையை இழுத்துப் பூட்டுப் போட்டுப் பூட்டி சாவியைத் தன்வசம் எடுத்துக் கொண்டார். அவர் ஒளி வடிவத்தில் கடவுளைப் பார்த்ததுக்கூட எதிர்காலத்தில் குத்துவிளக்காக மாறி இந்து மதச் சடங்காகி விடக்கூடாது என்பதற்காக விளக்கு தகரத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

ஒரு முறை காஞ்சி சங்கராச்சாரியுடன் உரையாடியபோது சமஸ்கிருதமே 'மாத்ரு பாஜை' (அனைத்து மொழிக்கும் தாய்) என்று கூறியபோது, அப்படியானால் தமிழ் 'பித்ரு பாஜை' (தந்தை மொழி) என்று வாதிட்டு, தமிழின் சிறப்பை விரிவாக விளக்கி வாதம் செய்திருக்கிறார், அடிகளார், பூணூல், உச்சிக்குடுமி என்ற பார்ப்பன அடையாளங்களுக்கு ஞானசபையில் இடமில்லை. அதனால் அவரது சீடரான சபாபதி சிவாச்சாரியார் அந்த அடையாளங்களை நீக்கிக் கொண்டார்.

ஒரு முறை காஞ்சி சங்கராச்சாரியுடன் உரையாடியபோது சமஸ்கிருதமே 'மாத்ரு பாஜை' [அனைத்து மொழிக்கும் தாய்] என்று கூறியபோது, அப்படியானால் தமிழ் 'பித்ரு பாஜை' [தந்தை மொழி] என்று வாதிட்டு, தமிழின் சிறப்பை விரிவாக விளக்கி வாதம் செய்திருக்கிறார், அடிகளார், பூணூல், உச்சிக்குடுமி என்ற பார்ப்பன அடையாளங்களுக்கு ஞானசபையில் இடமில்லை.

தில்லை நடராசன் கோயிலுக்குத் தரிசிக்கச் சென்ற அடிகளார், இரகசிய லிங்கத்தைக் காட்டுமாறு தீட்சதர்களிடம் கேட்க, தீட்சதர்கள், கோயிலுக்குள் உங்களுக்கான இடத்தில் போய் தரிசியுங்கள்; கர்ப்பகிரகம் அருகே வரக் கூடாது என்று கூறினர். சினமடைந்த வள்ளலார். உங்களுக்கு எதிராக ஒரு தலம் உண்டாக்கி, நடராசனையும் அங்கே அழைத்துக் கொள்கிறேன் என்று சபதம் செய்தார். தில்லைக்கு அருகே வடலூரில் தனது சன்மார்க்க சபையை உருவாக்கியதற்கு காரணம் அதுதான் என்கிறார் பு. பாலசுந்தரநாயகர். தனது "இராமலிங்கப்

பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் மருட்பா மறுப்பு" என்ற நூலில் இதைப் பதிவாக்கியுள்ளார். திரு.வி.க.வும் தனது வாழ்க்கைக் குறிப்பில் இதைப் பதிவு செய்கிறார். உண்மையில் இது வள்ளலாரை எதிர்த்து எழுதப்பட்ட நூல். அப்படி வள்ளலார் வடலூரில் உருவாக்கிய கட்டிடம் இடி விழுந்து தகர்ந்து விட்டது என்ற செய்தியும் வள்ளலாருக்கு எதிராக மேற்குறிப்பிட்ட நாயகர் தனது நூலில் எழுதினார். அது உண்மையல்ல: அந்தக் கட்டிடம் தாமரை வடிவில் இப்போதும் காட்சியளிக்கிறது. கட்டடத்துக்கு முன்பு போடப்பட்ட பந்தல்தான் தீப்பற்றி எரிந்தது.

ம.பொ.சியும் தில்லை கோயிலில் தீட்சதர்கள் வள்ளலாரை அவமதித்ததற்குச் சான்றுகள் இல்லை என்றே எழுதுகிறார். "வருவார் அழைத்து வாடி வடலூர் வடதிசைக்கே" என்ற கீர்த்தனை ஒன்றைத் தவிர வேறு சான்றுகள் இல்லை என்று ம.பொ.சி. சாதிக்கிறார். உண்மையில் வள்ளலாரே அருட்பா உரை நடைப் பகுதியில் சிதம்பரம் கோயிலைத் தான் தனது திருச்சபைகளின் வழியாக புதிதாக உருவாக்கினேன்" என்று எழுதியிருக்கிறார். தனது ஞானசபைக்கு அதுதான் உண்மை. சிதம்பரம் என்பதை வலியுறுத்த 'உத்திரஞான சிதம்பரம்' என்றே வள்ளலார் அழைத்தார், ம.பொ.சி.யின் ஒரு சார்புப் பார்வையினால் இந்த ஆதாரங்களை மறைத்துத் தனது 'விபீடண'ச் சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.



சமரச சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, சுத்த சன்மார்க்க சத்திய தருமச் சால என்ற பெயர்களோடு தொடக்கத்தில் இணைத்திருந்த 'வேத' என்ற சொல்லைப் பிறகு முற்றிலுமாக நீக்கினார்.

வடலூருக்குப் பெரியார் ஒருமுறை நேரில் பார்வையிடச் சென்ற போது, அசைவ உணவு உண்போருக்கு அனுமதி இல்லை என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்து உள்ளே செல்ல நிர்வாகிகள் அழைத்தும் மறுத்து விட்டார். ஆறாம் திருமுறையில் தேர்வு செய்த பாடல் தொகுப்பைச் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சார்பில் பெரியார் வெளியிட்டார்.

தொடர்ந்து 'ஞானசபை' வருவதை நிறுத்திக் கொண்ட வள்ளலார் தனது சித்தி விளாகம் குடியிருப்பிலேயே தங்கிக் கொண்டார். எப்போதோ ஒருமுறை வருவதும் சன்மார்க்கிகளைச் சந்திப்பதும் வழக்கமாக்கிக் கொண்டார். இறுதியாக தன் குடிலுக்குள் சென்று கதவை தாளிட்டுக் கொண்டவர் திரும்பவே இல்லை. ( 1874 ஜன.30)

விடைபெறும் முன்அவர் "கடை விரித்தேன் கொள்வாரில்லை" என்று கூறியதாகக் கூறப்படுகிறது. இதற்கு வரலாற்றுப் பதிவு இல்லை; செவி வழிச் செய்தி தான்.

சொந்த சைவ நெறியையே எதிர்த்து மதம், குலம் சார்ந்த ஆச்சாரங்களைப் புறக்கணித்து மனிதர் மீது மனிதர் காட்டும் அன்பு எனும் ஜீவகாருண்யமே கடவுள் என்று பறைசாற்றி கோயில், சிலை, ஆகமம், சடங்குகளைப் புறக்கணித்து, காவி உடைக்கு மாற்றாக வெண்ணிற உடை தரித்து பார்ப்பன வேத அடையாளங்களை நீக்கிக் கோயில் என்ற நிறுவனத்தைப் புறக்கணித்துப் புலால், மது அருந்தாத எந்தச் சாதியும் நேரடியாக ஒளி வடிவக் கடவுளை வணங்கலாம் என்ற சமத்துவத்தை உருவாக்கி அர்ச்சகர் எனும் இடைத்தரகர்களை ஒழித்து வாழ்ந்து காட்டிய வள்ளலார் ஒரு புரட்சித் துறவி! பார்ப்பன எதிர்ப்பு மரபின் வரலாற்றுத் தொடர்ச்சி!

## ஆதார நூல்கள் :


1) இராமலிங்கஅடிகள் வரலாறு - ஊரன்அடிகளார்

2) அருட்பா ஜ் மருட்பா - பா.சரவணன்.

3) தமிழகத்தில் சமூக சீர்திருத்தம் இரு நூற்றாண்டு வரலாறு - பேராசிரியர் அருணன்

4) வடலூரும் ஈரோடும் - திருக்குறள் முனுசாமி

5) வள்ளலாரின் ஆறாம் திருமறை பாடல்தொகுப்பு - குடி அரசு வெளியீடு

6) திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள்

7) ஆறுமுக நாவலர் சரித்திரம் - கைலாசப் பிள்ளை

8) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - மா.பொ.சி

9) கா.சுப்பிரமணியப் பிள்ளை இலக்கிய வரலாறு. ●

# சந்துரு 20 லட்சம் மதிப்புள்ள நூல் நன்கொடை





**நான் உயிரோடு இருக்கும்போதே.....**

“... திடீரென்று சில வழக்கறிஞர்கள் இறந்துவிடுவார்கள். அவர்களுடைய வீட்டிலும் வழக்கறிஞர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். ஜூனியர்களும் தனியாகப் போய்விடுவார்கள். இதனால், அந்த புத்தகங்கள் தனிமைப்பட்டுவிடும். சிலருக்கு வயது முதிர்ச்சியின் காரணமாகவோ, குடும்பச்சூழல் காரணமாகவோ சேர்த்துவைத்த புத்தகங்களை பராமரிக்கமுடியாத சூழல் ஏற்படலாம். இதுபோன்ற புத்தகங்களை சென்னை மயிலாப்பூரில் பழைய புத்தகங்கள் வாங்கும் சீனிவாசன் என்பவரிடம் விற்றுவிடுவார்கள். எனக்கு அப்படியெல்லாம் நடக்கக்கூடாது. நான் உயிரோடு இருக்கும்போதே எனது நூல்கள் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்பதால் இப்போதே கொடுத்துவிட்டேன்... “

மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு ரூ.20 லட்சம் மதிப்புள்ள தனது புத்தகங்களை அன்பளிப்பாக நல்கிய நீதிபதி K.சந்துருவின் விகடன் பேட்டியிலிருந்து..

## நந்தினி நிரஞ்சனா விடுதலை..

**52 நாட்கள் சிறைவாசத்துக்குப் பிறகு கோவை மத்திய சிறையில் இருந்து பிணையில் விடுதலை..**




தமிழ்நாட்டில் மதக்கலவரத்தை உருவாக்க தொடர்ந்து சதி செய்து வரும் RSS பாசிச கும்பல் ஊட்டியில் ரகசிய சதி கூட்டம் நடத்தியதை எதிர்த்து போராடிய நந்தினிநிரஞ்சனா இருவரையும் திமுக

அரசின் காவல்துறை கடந்த 13.07.2023 அன்று பொய் வழக்கில் கைது செய்து கோவை மத்திய சிறையில் அடைத்து வைத்திருந்தது. பொய் வழக்கை ரத்து செய்து சிறையில் இருந்து விடுவிக்க வேண்டும் எனக்கோரி பிணை கோராமல் சிறையில் இருந்தனர். ஆனால் 50 நாட்களுக்கு மேலாகியும் திமுக அரசு இக்கோரிக்கைக்கு செவி சாய்க்காத நிலையில் பிணை கோரி சூலூர் குற்றவியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தோம். இம்மனுவை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் நந்தினி நிரஞ்சனா இருவருக்கும், பிணை வழங்கி நேற்று (01.09.2023) உத்தரவிட்டது. நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து இன்று 02.09.2023) நந்தினிநிரஞ்சனா இருவரும் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

நந்தினி நிரஞ்சனா இருவரின் விடுதலைக்காக, குரல் கொடுத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனந்தன், குணா



# அகண்ட பாரதக் கனவுக்காக எரியும் மணிப்பூர்

- பாரி

எல்லோரும் அறிந்த கதையிலிருந்து தொடங்குவோம். யானையைப் பார்த்த குருடர்களில் காலைத் தொட்டவன் தூண் என்றும், வயிற்றைத் தொட்டவன் சுவர் என்றும், வாலைத் தொட்டவன் கயிறு என்றும், காதைத்தொட்டவன் முறம் என்றும் கூறினார்களாம். அதுபோல எரியும் மணிப்பூர் சிக்கல் குறித்து அவரவர் சார்ந்துள்ள வர்க்க நலனிலிருந்து விளக்கப்படுகிறது. தமிழ்த் தேசிய இன பாட்டாளி வர்க்கத்தின் சார்பில் அதன் வர்க்க நலனிலிருந்து விளக்குவோம்.

## மணிப்பூர் :

வடகிழக்கு மாநிலங்களான மணிப்பூர், அசாம், மேகாலயா, நாகலாந்து, அருணாசலப் பிரதேசம், மிசோரம், திரிபுரா ஆகியன ஏழு சகோதரிகள் என்றும் இதனுடன் சேர்த்து சிக்கிம் ஒரு சகோதரர் என்றும் இந்திய ஆளும் வர்க்கத்தால் அழைக்கப்படுகின்றன. வடக்கே நாகலாந்து, தெற்கே மிசோரம், மேற்கே அசாம், கிழக்கே மியான்மருடன் (பர்மாவுடன்) அனைத்துலக எல்லைகளைக் கொண்டுள்ளது. 2016க்கு முன்னர் 9 மாவட்டங்களும் பிறகு 7 புதிய மாவட்டங்களுடன் தற்போது 16 மாவட்டங்களைக் கொண்டது. 8,621 சதுரமைல் பரப்பளவைக் கொண்டது. இதன் தலைநகரம் இம்பால்.

2011 மக்கள் தொகை கணக்கின்படி மொத்த மக்கள் தொகையில் மெய்தி மக்கள் 55 விழுக்காடும் 34 குழுக்களில் பழங்குடி மக்கள் 45 விழுக்காடும் உள்ளனர். மத அடிப்படையில்



இந்துக்கள் 41.39 விழுக்காடும் கிறித்தவர்கள் 41.29 விழுக்காடும் இசுலாமியர்கள் 8.40 விழுக்காடும் பௌத்தர்கள் 0.25 விழுக்காடும் சமணர்கள் 0.06 விழுக்காடும் சீக்கியர்கள் 0.05 விழுக்காடும் பிறர் 8.19 விழுக்காடும் மத மற்றவர்கள் 0.38 விழுக்காடும் உள்ளனர். மெய்தி மக்கள் 28.5 இலட்சம் என்றால் அதில் 2 இலட்சம் பேர் மட்டும் கிறித்தவர்களாகவும் உள்ளதுடன் மேலும் பிற மதங்களைப் பின்பற்றுகின்றவர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பழங்குடிகளில் பெரும்பாலோர் கிறித்தவர்கள் உள்ளனர்.

பழங்குடிளில் பெரும்பான்மையினர் நாகா, குக்கி, மிசோ ஆகியோர் ஆவர். மெய்தி மக்களின் மொழி மணிப்பூர். பழங்குடிகளின் மொழி அந்தந்த பழங்குடி மொழியுடன் ஆங்கிலமும் பரவலாக பேசுகின்றனர்.

ஆட்சி அதிகாரத்தை பொருத்த அளவில் சமவெளிப்பகுதியில் 10 விழுக்காட்டு நிலங்கள் மெய்தி மக்களிடமும் 90 விழுக்காட்டு நிலங்கள் பழங்குடி மக்களிடமும் உள்ளன. 60 சட்டமன்றத் தொகுதிகளில் 40 மெய்தி மக்களிடமும், 20 பழங்குடி மக்களிடமிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஐ.எ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகள் மற்றும் அமைச்சரவை அனைத்திலும் 90 விழுக்காடு மெய்தி மக்களே மேலாண்மை செலுத்துகின்றனர். 1992 இல் மண்டல் குழுவின் பரிந்துரை மெய்தி மக்களை பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் அறிவித்தது. மலைவாழ் பழங்குடியினருக்கு (ST) பிரிவில் 31 விழுக்காடு இட ஒதுக்கீடு இருந்தும் அரசுப் பணிகளில் 5.7 விழுக்காடு மட்டுமே உள்ளனர்.

## இந்து ராஷ்ட்டீரியத்தில் ஜனபதங்கள்

1925 ஆம் ஆண்டு நாகபுரியில் ஆர்எஸ்எஸ் இயக்கத்தை தோற்றுவித்த கேசவ பலிராம் கெட்கேவார் மற்றும் அவருடன் தொடக்கத்தில் பொறுப்பில் இருந்த அனைவரும் பார்ப்பனர்களிலேயே தங்களை உயர்வானவர்களாக கருதிக் கொள்ளும் சித்பவன் பார்ப்பனர்களே.

ஆர்எஸ்எஸ்சும் அதன் துணை அமைப்புகளாக பிஜேபி உள்ளிட்ட சங்பரிவாரக் கும்பலும் அகண்ட பாரதத்தில் இந்து ராஷ்ட்டீரம் அமைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். இந்து ராஷ்ட்டீரம் என்பது இன்றைய இந்திய எல்லைகளுடன் வடக்கே திபெத் முதல் தெற்கே இலங்கை வரையிலும் மேற்கே ஆப்கானிஸ்தானத்திலிருந்து

கிழக்கே பர்மா வரையிலும் எல்லைகளைக் கொண்டதாகும். அவர்களது அகண்ட பாரதத்தில் இஸ்லாமியர்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு கம்யூனிஸ்டுகளுக்கு இடம் இல்லை. இங்கே சமக்கிருத மொழியுடன் சாதிய படிநிலையைக் கொண்ட வர்ணாசிரம கொள்கை நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் ராமர் கோவில், பொது சிவில் சட்டம், அரசியல் சாசனப் பிரிவு 370 நீக்கம், இந்தியாவை மண்டலங்களாக மாற்றுவது இட ஒதிக்கீட்டை ஒழிப்பது ஆகியன இவர்களது அடிப்படைக் கொள்கையாகும். அதனை படிப்படியாக செயல்படுத்தி வருகின்றனர். அதில் ஒரு பகுதிதான் தற்போது மணிப்பூரில் செயல்படுத்தப்படுகிறது.

1991 இல் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு பின் பன்னாட்டு முதலாளிகளுக்கு இடையிலான பனிப்போர் முடிவுக்கு வந்தது. இப்புதிய நிலைமைகளில் வல்லரசுகள் பன்னாடுகளைக் கொள்ளையிட புதியக் காலனியக் கொள்கையைக் (டங்கல் திட்டம் -தாராளமய, தனியார்மய, உலகமயக் கொள்கை) கொண்டு வந்தனர். இது பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின் ஆதிக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டது. இதில் இந்தியாவும் பிணைக்கப்பட்டது. இந்த புதிய காலனியக் கொள்கைதான் இந்திய ஆளும் வர்க்கத்தையும், ஆட்சியாளர்களையும் இயக்குகிறது. இந்தியாவில் ஜனநாயகம் என்பது இதற்கு உட்பட்டதுதான்.

தேசம் என்று அழைக்கப்படும் இந்தியா இதே எல்லைகளுடன் 1947க்கு முன்னும் பின்னும் இருந்ததில்லை. இருக்கப்பொவதுமில்லை. பிரிட்டிஷ் இந்தியாவில் இன்றைய இந்தியாவின் பகுதிகளுடன் இலங்கை, பர்மா (மியான்மர்), பாகிஸ்தான், பங்களாதேஷ், பூடான், சிக்கிம் ஆகிய நாடுகளும் சேர்ந்தே இருந்தன. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்கு முன் பல்வேறு பேரரசுகளில் ஆப்கானிஸ்தான் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கூட பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தான இந்தியா, பிரெஞ்சு இந்தியா, டச்சு இந்தியா, போர்ச்சுகல் இந்தியா என்றே இருந்துள்ளன. இந்தியாவில் நிலவிய பெரிய பேரரசுகளில் கூட தென்னிந்தியாவின் சில பகுதிகள் வட இந்தியாவின் பல பகுதிகள் இருந்ததில்லை. இவ்வாறாக பல்வேறு இனங்கள், பழங்குடிகள், மொழிகள் பேசிய மக்கள் எவ்வித பிடிப்பும் இல்லாமல் உரிமையற்றவர்களாக இந்தியாவுடன் இணைக்கப்பட்டனர். இது பார்ப்பன பனியா முதலாளிகளின் விரிவான சந்தைக்காகவும் பார்ப்பன அதிகார வர்க்க நலனுக்காகவும் செய்யப்பட்டன. இந்திய தேசமென்பது மத்திய காலத்திலும் அதன் பிறகும் உருவான மொழி அடிப்படையிலான இயல்பான தேசமன்று. இது மத அடிப்படையிலானது. மத அடிப்படையிலான தேசங்கள் வரலாற்றில் நிலைத்திருப்பதில்லை என்பது இந்திய ஆளும் மற்றும் அறிவாளி வர்க்கத்திற்குத் தெரியும். ஆகவே மக்களை தேசிய இன அடிப்படையில் அணிசேரவிடாமல் சாதி, மத, பழங்குடிகளிடையே உள்ள முரண்பாடுகளை பகைமுரண்பாடுகளாக மாற்றி மோதவிட்டு இந்தியாவை 100 மண்டலங்களாக (ஜனபதங்களாக) மாற்றும் முயற்சியில் ஈடுப்பட்டுள்ளனர்.

கி.மு.ஆறாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் முடியாட்சி அரசுகள் ஜனபதம் என்றும் முடியாட்சி அல்லாத அரசுகள் சங்கம் அல்லது கணம் என்றும் வழங்கப்பட்டன. ஜனபதம் என்பது பார்ப்பனர்களைத் தலைமை இடமாகக் கொண்டு அவர்களது நலனை முதன்மையாகக் கொண்ட முடியராசாகும். அப்படி இந்தியாவை 100 ஜனபதங்களாகவும் அதில் தமிழ் நாட்டை மூன்று அல்லது நான்கு ஜனபத மண்டலங்காளகவும் மாற்றும் திட்டத்துடன் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பி.ஜே.பி உள்ளிட்ட சங்பரிவாரக்கும்பல் செயல்படுகிறது. இதன் நோக்கம் தேசிய இனங்களை துண்டுதுண்டாக சாதி, மதங்களாக உடைத்து அவர்களிடையே பெரும் பிளவுகளை உருவாக்கி மோதவிட்டு இன அழிப்பு செய்வதாகும். காஷ்மீரில் காஷ்மீரின் முன்னாள் மூன்று முதல்வர்கள் உள்ளிட்ட 800 க்கும் அதிகமானோரை சிறையிலும், வீட்டுத் தடுப்புக் காவலிலும் வைத்து விட்டு, இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தப்போகிறது என நாட்டு மக்களிடம் பொய் சொல்லிவிட்டு, இரண்டு கட்டங்களாக அடுத்தடுத்து 38,000 இராணுவத்தினரை காஷ்மீரில் நிறுத்திவிட்டு, (7 பேருக்கு ஒரு வீதம்) காஷ்மீரின் சிறப்பு அதிகாரம் வழங்கும் சட்டம் பிரிவு 370 ஐ நீக்கம் செய்தது. மாநில அரசின் அனுமதி இன்றி இதனை செய்யக்கூடாது என சட்டமும் நீதி மன்றமும் சொன்ன பிறகு மக்களிடமோ, கட்சிகளிடமோ, நாடாளுமன்றத்திடமோ, ஏன்? சொந்த அமைச்சரவைக்கே கூட தெரியாமல் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், பொதுச் செயலாளர் பையாஜி ஜோசியிடம் மட்டும் கலந்து பேசி மோடியும், அமித்ஷாவும் கமுக்கமாக வைத்திருந்து அந்த மாநில ஆளுநருக்கே தெரியாமல் 2019 ஆகஸ்ட் 5 அன்று குடியரசுத் தலைவரின் உத்திரவுப்படி காஷ்மீருக்கான சட்டப்பிரிவு 370 ம் 35யும் நீக்கப்பட்டன. ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி. உள்ளிட்ட சங்பரிவாரக் கும்பலின் இச்செயலை தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்கமும், இந்திய பத்திரிக்கையாளர் சங்கமும் கண்டித்து கூட்டாக அறிக்கை விட்டுள்ளது. காஷ்மீர் சட்டமன்றம் கொண்ட ஜம்முகாஷ்மீர், சட்டமன்றம் இல்லா லடாக் ஆகிய இரண்டு ஒன்றியங்களாகப்

(அவர்களது மொழியில் ஜனபதங்களாக) பிரிக்கப்பட்டன. இதனை டெல்லியை மாநிலமாக்க போராடி வரும் அரவிந்த்கெஜ்ரிவால் ஆந்திராவின் சிறப்புரிமைக்காகப் போராடி வரும் ஜெகன் மோகன் ரெட்டி, தெலுங்கான சிறப்புரிமைக்காகப் போராடி வரும் சந்திர சேகரராவ் ஆகியோர் பி.ஜே.பிக்குத் துணை நின்றனர். மேலும் பிஜி ஜனதா தளம், பகுஜன் சமாஜ் கட்சி, அ.தி.மு.க. காங்கிரசிலுள்ள சிலரும் பி.ஜே.பியின் பக்கம் நின்றனர். இது அவர்களது நலன் சார்ந்த சந்தர்ப்பவாதம். இவர்களுக்கும் ஜனநாயகத்திற்கும் தொடர்பில்லை. விடுதலைக்காக போராடிய காஷ்மீர் (ஜம்மு காஷ்மீர், லடாக்) இரண்டாக பிரித்து சிதைக்கப்பட்டது.

பிரிட்டிஷ் வல்லாதிக்கத்தின் நேரடி ஆட்சிக்காலத்திலேயே நாகா, காஷ்மீர், பஞ் சாபி ஆகிய தேசிய இனங்கள் தங்களது அடிமை நிலையை எதிர்த்து குரல் கொடுத்து வந்தன. 1960களில் மிசோ, மணிப்பூர் மக்கள் தங்களது விடுதலைக்காய் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் நடத்தி வந்தனர். காஷ்மீர் மற்றும் வடகிழக்கு தேசிய இன மக்கள் நடத்திய தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் இந்திய ஆளும் வர்க்கத்தை நிலைக்குலையைச் செய்ததுடன் அவர்களிடம் மண்டியிட வைத்தன. அவ்விடுதலைப் போராட்டங்களைச் தற்போது சிதைத்ததில் காங்கிரசுக்கு பெரும் பங்குண்டு. இதனை காங்கிரசு ஜனநாயக வேடமணிந்து கம்யூனிஸ்டுகள், பிஜேபியினரின் ஒப்புதலோடு செய்தது. பி.ஜே.பி. அம்முகமூடியை தூக்கி எரிந்து விட்டுச் செய்கிறது. காஷ்மீரில் செய்ததை தற்போது மணிப்பூரில் செய்ய இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பல்வேறு தேசிய இனங்களை ஒழித்து கட்டி அகண்ட பாரதம் அமைக்க தங்களது பாதையை செப்பனிடுகிறார்கள்.

## சுடுகாடாகும் மணிப்பூர்

2023 ஏப்ரல் 27ஆம் நாள் மணிப்பூர் உயர்நீதி மன்றத்தின் இடைக்காலத் தலைமை நீதிபதி தமிழ்நாட்டுக்காரர் எம்.வி.முரளிதரன் வழங்கிய தவறான தீர்ப்பு மணிப்பூரில் அணையா தீயாக பற்றி எரிகிறது. இந்த தீர்ப்பு தவறானது என்பதை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் கூறிவிட்டார். 2023 மே 3 நாள் எரியத் தொடங்கிய தீயில் மத்தியிலும் மாநிலத்திலும் ஆளும் மோடிக் கும்பலின் இரட்டை எஞ்சின் அரசுகள் குளிர்காய்கின்றன. இந்தியப் பிரதமர் மோடி மகிழ்ச்சியில் பன்னாடுகளில் வலம் வருகிறார். மோடி கோமாளியாக சித்தரிக்கப்பட்டாலும் அவர் காரியக் கோமாளியே.

2023 மார்ச் 27 அன்று மணிப்பூர் பழங்குடிசங்கத்தின் (தற்போது பா.ஜ.க. பின்புலத்தில் செயல்படுகிறது, முன்பு காங்கிரசு பின்புலத்தில் செயல்பட்டது) வழக்கின் மீது மணிப்பூர் உயர்நீதிமன்றம் மெய்திகளது பழங்குடி அந்தஸ்து கோரிக்கையை மணிப்பூர் மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய 4 மாதம் அவகாசம் கொடுத்தது. இந்த தீர்ப்பு பழங்குடி மக்களின் நிலங்களை மெய்தி முதலாளி வர்க்கமும் கார்பரேட் முதலாளி வர்க்கமும் பறிக்கும் நோக்கமும் பழங்குடி மக்களின் உரிமையை பறிக்கும் நோக்கமும் கொண்டதாகும். ஆகவே இதனை எதிர்த்து அனைத்து பழங்குடிகளின் மாணவர் சங்கம் மே 3 நாள் இம்பால் தலைநகரிலிருந்து 60 கி.மீ தொலைவில் சுராக்சன்பூர் மாவட்டத்திலுள்ள டோர்பால் பகுதி உள்ளிட்ட அனைத்து 8 மலை மாவட்டங்களிலும் பேரணிக்கும் ஏற்பாடு செய்து நடத்தியது. இப்பேரணியில் பா.ஜ.க. ஆதரவோடு மெய்தி குழுக்களும், குக்கி போராளிக் குழுக்களும், மக்களும் மோதிக்கொண்டனர். அது வன்முறையாக மாறி இன்றுவரை நீடிக்கிறது மெய்திகளுக்குப் பின்னால் ஆர்.எஸ். எஸ்., பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். துணை அமைப்புகளான அரம்பைதெங்கோல், மெய்தி லீபன் போன்ற இந்து மதவெறிஅமைப்புகள் உள்ளன.குக்கிகளுக்கு பின்னால் போராளிக் குழுக்கள் உள்ளன. நாகா பழங்குடிகளுக்கும் மெய்திகளுக்கும் இடையே கடந்த காலங்களில் முரண்பாடுகள் வெடித் போதும் நாகாக்களுக்கோ முஸ்லீம்களுக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை. மணிப்பூர் சிக்கல் மெய்தி, குக்கிகளுக்கு இடையிலான மத மோதலாகத் தொடங்கி தற்போது இனமோதலாக மாறிவிட்டது. இம்பால் சமவெளியிலிருந்த குக்கி இன மக்கள் வெளியேறிவிட்டனர். அதேபோல் மலை மாவட்டங்களிலிருந்து மெய்தி இன மக்கள் வெளியேறி விட்டனர்.

மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறையில் இதுவரை 200க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். பழங்குடியின பெண்கள் கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். 60,000க்கும் மேற்பட்ட மக்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டனர். 300க்கும் மேற்பட்ட தேவாலாயங்களும் 1000க்கும் மேற்பட்ட கோவில்களும் குக்கி மக்களது 3000 வீடுகளும் தீக்கரையாக்கப்பட்டுள்ளன. குஜராத்தில் முஸ்லீம்களில் வீடுகள் அடையாளக் குறியிட்டு தாக்கியது போல பழங்குடிகளின் வீடுகள் அடையாள குறியிட்டு தாக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் மணிப்பூரின் நிலங்கள், காடுகள், வீடுகள் இந்து மத வெறியர்களால் சுடுகாடாக்கப்பட்டுள்ளன.

## கார்பரேட்டுகளின் கழுகுப் பார்வையில் மணிப்பூர்

மணிப்பூர் உள்ளிட்ட வட கிழக்கு மாநிலங்களில் மொத்த நிலப்பரப்பில் 90 விழுக்காடு மலைகளாக உள்ளன. அவற்றில் ஏரளமான கரிம, கனிம வளங்கள் உள்ளன. அதனை கொள்ளையிடுவதற்கு கார்பரேட் முதலாளிகள் திட்மிட்டு செயல்படுகின்றனர். அவர்களுக்கு துணையாக ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. உள்ளிட்ட சங்பரிவாரக்கும்பலும், காங்கிரசும் இருக்கின்றன.

காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களை ஏமாற்றி இந்தியாவுடன் இணைப்பதற்கு சிறப்பு அதிகாரம் வழங்கும் சட்டங்களை இயற்றினர். இந்தியவில் தற்போது அச்சட்டங்களை நீக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். உலகின் எந்த மூலையிலும் இந்திய ஆளும் வர்க்கம் நிலம் வாங்கலாம். ஆனால் காஷ்மீரில் நிலம் வாங்க இயலாத நிலையை 370,35எ ஆகிய சட்டப்பிரிவுகள் இடம் தரவில்லை. அதனை 2019 ஆகஸ்டு 5 அன்று நீக்கினர். அதே போன்ற சட்டப் பிரிவுகள் வடகிழக்கு மாநிலங்களிலும் (மணிப்பூரிலும்) உள்ளன. பழங்குடிகளைத் தவிர்த்து மணிப்பூர் மலைப்பகுதிகளில் மெய்திக்களோ அல்லது வேறு யாரும் நிலம் வாங்க இயலாத வகையில் அரசியல அமைப்புச் சட்டம் 371 மற்றும் மணிப்பூர் நிலச் சீர்திருத்த சட்டம் (MLR SLR ACT 1960) உள்ளன. அதிலுள்ள முக்கியப் பிரிவுகள்.


1.பழங்குடியினர் அல்லாத ஒருவர் பழங்குடியினத்தவரிடமிருந்து நிலம் வாங்கினால் அது செல்லத் தக்கதல்ல.

2. ஒரு பழங்குடியினத்தவர் (ST) மற்றொரு பழங்குடியினத்தவருக்கு நிலத்தை விற்கலாம் அல்லது வாங்கலாம்.

3.பழங்குடியினத்தை சாராத ஒருவர் நிலம் வாங்க வேண்டுமெனில் மலைப்பிரதேச கமிட்டியின் துணை ஆணையரிடம் முன் அனுமதி பெற வேண்டும்.

4.கூட்டுறவு சங்கத்திற்கு பழங்குடியினர் குத்தகையின் பெயரில் நிலம் வழங்கலாம்.

இது போன்ற சட்டப் பிரிவுகள் தான் இந்திய ஆளும் வர்க்கத்தையும் கார்பரேட் முதலாளிகளையும் அச்சுறுத்துகின்றன. பாதுகாப்பான இச்சட்டப்பிரிவுகளை நீக்கும் முயற்சியில் காங்கிரசு, பி.ஜே.பி. அரசுகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. மணிப்பூரில் காங்கிரசு கட்சி ஆட்சியல் இருந்தபோது பழங்குடிகளின் "மணிப்பூர் நில சீர்திருத்த மசோதா" கொண்டுவரப்பட்டது. இதனை எதிர்த்து பழங்குடியினர் போராடினர். அதில் 9 பழங்குடி இளைஞர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களை வாங்க மறுத்து 600 நாட்களுக்கு மேல் தொடர்போராட்டத்தை பழங்குடியினர் நடத்தினர். அம்மசோதாவை ஜனாதிபதி திருப்பி அனுப்பிய பிறகே போராட்டத்தைக் கைவிட்டனர். மத்தியிலும், மாநிலத்திலும் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி உள்ளிட்ட சங்பரிவாரக் கும்பல் ஆட்சிக்கு வந்த பிறகு "பாதுகாக்கப்பட்ட காடுகள், சேமக்காடுகள், வனவிலங்கு சரணாலாயங்கள் என்ற பெயரில் பழங்குடிகளை அவர்களின் வாழ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்திவிட்டு அதை சமூக நலக்காடுகள் என்ற பெயரில் தனியார் நிறுவனங்களிடமும் அறக்கட்டளைகளிடமும் ஒப்படைக்கும் வேலையைச் செய்கின்றனர். இதுபோல் நாட்டில் உள்ள 220 சமூக நலக்காடுகளில் 200க்கும மேற்பட்டவை வடகிழக்கு மாநிலங்களில் உள்ளன. கிட்டதட்ட 75 விழுக்காடு மணிப்பூர் காடுகள் இதுபோன்ற சமூக நல அமைப்புகளால் பராமரிக்கப்படுகின்றன. பெரும்பாலன சமூக நலக் காடுகளை இந்திய வன உயிர்கள் அறக்கட்டனை வைத்திருக்கின்றன. இந்நிறுவனம் இங்கிலாந்தின் உலக நில அறக்கட்டளை என்ற அமைப்பின் கூட்டாளி நிறுவனமாகும். மேற்சொன்ன உலக நில அறக்கட்டளை பல்வேறு நாடுகளில் காடுகள் ஆக்கிரமிப்பு என்ற பெயரில் பூர்வகுடிகளையும் பழங்குடிகளையும் காடுகளில் இருந்து விரட்டி அடிக்கும் வேலையைச் செய்து வருகிறது. இந்திய வன உயிர்கள் அறக்கட்டளையும் அதன் அறிவாளிகளும் சேர்ந்து உச்சநீதிமன்றத்தை அணுகி காடுகளில் இருந்து பழங்குடிகளை விரட்டி அடிக்கும் தீர்ப்பொன்றை 2019 இல் பெற்றனர். மணிப்பூர் பா.ஜ.க. அரசு பழங்குடிகளை வனப் பாதுகாப்பு, வன விலங்குககள் பாதுகாப்பு என்ற பெயரில் சொந்த மண்ணில் இருந்து வேரோடு பிடுங்கி எடுக்கும் வேலையை கடந்த சனவரி திங்களிலிருந்து செய்து வருகின்றது. இதுவரை சுமார் 35,000க்கும் மேற்பட்டோர் அவ்வண்ணம் அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர். இதை எதிர்த்து அங்கு போராட்டங்கள் நடந்த வண்ணம் இருந்தன.



1991 இல் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு பின் பன்னாட்டு முதலாளிகளுக்கு இடையிலான பனிப்போர் முடிவுக்கு வந்தது. இப்புதிய நிலைமைகளில் வல்லரசுகள் பன்னாடுகளைக் கொள்ளையிட புதியக் காலனியக் கொள்கையைக் (டங்கல் திட்டம் தாராலமய, தனியார் மய, உலகமயக் கொள்கை) கொண்டு வந்தனர்.
இது பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின் ஆதிக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டது. இதில் இந்தியாவும் பிணைக்கப்பட்டது.
இந்த புதிய காலனிய கொள்கைதான் இந்திய ஆளும் வர்க்கத்தையும், ஆட்சியாளர்களையும் இயக்குகிறது.
இந்தியாவில் ஜனநாயகம் என்பது இதற்கு உட்பட்டதுதான்.

பழங்குடிகளிடம் நிலவிய அதிருப்தி மேலும் தீவிரப்படும் வகையில் பா.ஜ.க. முதல்வர் பிரேன்சிங் குக்கிகளை“ ஆக்கிரமிப்பாளர்கள், போதைப் பொருள் கடத்துவோர், கஞ்சா பயிடுவோர், சட்ட விரோத குடியேறிகள் எனப் பலவாறும் வசைப் பாடினார். மணிப்பூர் பா.ஜ.க. அரசு “போதைப் பொருள்களுக்கு எதிரானப் போர்” என்ற பெயரில் பழங்குடிகள் மீதான தாக்தலைக் கட்டவிழ்த்துவிட்டது. ஆனால் பள்ளத் தாக்கில் இருக்கக் கூடிய பன்னாட்டு போதைக் கடத்தல் மாஃபியாக்களின் முக்கிய புள்ளிகள் போன்ற மெய்யான குற்றவாளிகள் மீது கைவைக்கவில்லை” என்று வையம் இதழில் செந்தில் கூறுகிறார். மேலும், ஆர்எஸ்எஸ் முன்னாள் மாணவர் அமைப்பின் தலைவர், மைத்தி லீபுன் அமைப்பின் தலைவர் பிரமோத்சிங் தனது டிவிட்டர் பதிலும், “தி வயர்’ இணையதளத்திற்கு அளித்த பேட்டியிலும் “குக்கி இன மக்கள் அயலார், சட்ட விரோத குடியேறிகள், பூர்வகுடி மக்கள் அல்ல. வந்தேறிகள், வாடகைக்கு குடியிருப்போர்” என்றும் “ஒரு நாள் மைத்தி மக்கள் எழும் போது குக்கி இன மக்கள் இருக்கமாட்டார்கள்” என்றார்.

எனவே ஆர்எஸ்எஸ், பிஜேபி உள்ளிட்ட சங்பரிவார கும்பல் மண்ணின் மக்களான குக்கிகள் மீது வன்முறையை மத்திய மாநில இரட்டை எஞ்சின் அரசுகள் மூலமாகவும் மெய்தி மக்களின் இந்து மத உணர்வைத் தூண்டியும் ஏவிவிட்டுள்ளனர். இதன் மூலம் மக்களின் பிரச்சனையை திசை திருப்பி கார்பரேட் முதலாளிகளான அதானி, அம்பானி, பதஞ்சலி, கோத்ரேஜ், அக்ரோ வெட் ஆகிய நிறுவனங்களும் உலக வங்கி, ஆசிய வங்கி, ஜப்பான் ஜிகா போன்றவற்றிற்கும் மணிப்பூரின் இயற்கை வளங்களை கொள்ளையிட புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளனர். தமிழகத்தில் தேவேந்திர குல வேளாளர் சாதியினரை பட்டியல் சாதியிலிருந்து வெளியேற்றும் கோரிக்கையை முன் வைத்து பிஜேபி அரசியல் செய்கிறது. மணிப்பூரிலோ மெய்திக்களை பட்டியல் சாதியாக மாற்றும் கோரிக்கையை தூண்டிவிட்டு அரசியல் செய்கிறது. வடகிழக்கில், கேரளாவில், கோவாவில் மாட்டுக்கறி சாப்பிடு என்கிறார்கள். நாட்டின் பிற பகுதிகளில் மாடுகளைச் சொல்லி மக்களை கொல்கிறார்கள். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஒருமுறை அமெரிக்கா சென்ற போது ஓர் உரை முடித்து சாப்பிட உட்கார்ந்தாராம். அவருக்கு உணவு பரிமாறப்பட்டதும் மற்றவர் அதிர்ச்சியில் “அடல்ஜி அவர்கள் மாட்டுக்கறியை உண்ண கொடுத்திருக்கிறார்கள்” என்றார்களாம். உடனே அடல்ஜி சொன்னாராம், அதனால் என்ன பிரச்சனை? இது இந்திய பசு அல்ல. அமெரிக்க பசு தான். அதனால் சாப்பிடலாம் என்றாராம். இப்படி இடத்திற்கு, காலத்திற்கு ஏற்ப மாற்றிப் பேசும் பச்சோந்தி கூட்டம் தான் ஆர்எஸ்எஸ், பிஜேபி உள்ளிட்ட சங்பரிவார கும்பல்.

இத்துத்துவம் என்பது தான் இவர்களின் அடிப்படைக் கொள்கை. அதை முதலில் பேசிய வினாயக் தாமோதர் சவார்க்கர் “இந்துத்துவத்தையும் தெளிவாக வரையறுக்கப்படாத இந்து மதத்தையும் குழப்பிக் கொள்ள கூடாது. இந்துத்துவம் ஓர் அரசியல் கோட்பாடு” என்று அப்போதே தெளிவுப்படுத்திவிட்டார். அவர் ஒரு நாத்திகர். இந்தியாவை இந்து மயமாக்கு, இந்து மதத்தை ராணுவ மயமாக்கு என்பது அவரின் தாரக மந்திரம். அதனால் ஆர்எஸ்எஸ், பிஜேபி உள்ளிட்ட சங்பரிவார கும்பலின் அகண்ட பாரத நோக்கத்திற்காக அன்று குஜராத், காஷ்மீர் எரிந்தது. இன்று மணிப்பூர் எரிகிறது. நாளை தமிழ்நாடு எரிக்கப்படும்.

எனவே, ஆர்எஸ்எஸின் அகண்ட பாரத கனவுக்கு எதிராக தேசிய இனங்களின் உரிமைக்காகவும், பழங்குடி மக்களின் உரிமைக்காகவும் போராடுவோம். ஆர்எஸ்எஸ், பிஜேபி உள்ளிட்ட சங்பரிவார கும்பலை விரட்டியடிப்போம். உழைக்கும் மக்களின் விருப்பப்படி எல்லைகளை திருத்தி அமைப்போம்.

இறுதியாக, காங்கிரசு, இடது, வலது கம்யூனிஸ்டுகள் அவர்களது அடிவருடிகள் பேசும் இந்திய தேசமும், ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. உள்ளிட்ட சங்பரிவார் கும்பல் பேசும் இந்து தேசமும் பார்ப்பனர் பனியா, கார்பரேட் முதலாளிகளை பாதுகாக்கும் இரட்டை குழல் துப்பாக்கியே. ●



# ஐக்கம்மாக்களும் மாதவிடாயும்

தோழர் மகேஸ்வரி மீனாட்சி

மாதவிடாயைப் பற்றி எழுதி பேச வேண்டிய தேவை இன்னமும் இருந்து கொண்டே தான் இருக்கிறது. ஆனால் அதைப் பற்றி எதை எழுத என்று எனக்குள் ஒரு குழப்பத்திற்கிடையில் மாதவிடாய் பற்றிய செய்திகள் நண்பர்களின் மூலம் கிடைத்துக் கொண்டேயும் இருந்தது.

**முதல் செய்தி:**

மிகக்கவர்ச்சிகரமான ஆடம்பரமான வேலையாகக் கருதப்படும் விமானப்(பணிப்பெண்) உதவியாளர் பணியிடங்களில் பெரும்பாலும் பெண்கள்தான் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். ஐந்து ஆண்டுகளுக்கு மேல் விமானங்களில் பணி புரியும் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ரத்தப் போக்கு அதிகமாவதோடு வேறு சில மாதவிடாய் பிரச்சனைகளும் தைராய்டு மற்றும் கர்ப்பப்பை வாசல் அரிப்பு நோயும் ஏற்படுகிறது. இதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்க இதுவரை உலக அளவில் எந்த ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

நிறையப் பெண்கள் விரும்பி இந்த வேலைக்கு செல்கின்றனர். நிறையப் பயணம் மேற்கொள்ளலாம் நிறைய வெளிநாடுகளுக்கு சென்று வரலாம். நாகரிகமான மேல்தட்டு வாழ்க்கை வாழ முடியும் என்ற பல கவர்ச்சிகரமான அம்சங்கள் இளம் பெண்களை இப்பணியை நோக்கி ஈர்க்கிறது.



ஆனால் படித்த ஆங்கில அறிவு அதிகம் கொண்ட இந்தப் பெண்களில் எத்தனை பேருக்கு இந்த வேலையில் இப்படி ஒரு பிரச்சனை இருப்பது தெரியும். மற்ற வேலைகளில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றி பேசப்படும் அளவிற்கு இந்த பிரச்சனை வெளியில் பேசப்படவும் இல்லை, போதிய விழிப்புணர்வும் இல்லை. அதற்கான ஆராய்ச்சிகளும் பெரிய அளவில் மேற்கொள்ளப்படவில்லை

**இரண்டாவது செய்தி:**

சமீபமாக தமிழில் ஸீ 5ஓடிடி தளத்தில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் அயலி வெப் சீரியஸ்சில் வருவதைப் போலவே ஒரு கிராமம்.

இது எங்கோ மலையில் ஒளிந்து கொண்டிருக்கும் மலைவாழ் கிராமமெல்லாம் கிடையாது. சமதளத்தில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இராஜபாளையம் நகரத்திற்கு மிக அருகில் வெறும் நான்கு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிற கம்மாபட்டி என்ற கிராமம். இந்த கிராமத்தில் பெண்கள் வயதுக்கு வந்தவுடனேயே அவர்களின் படிப்பு நிறுத்தப்பட்டு திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர்.

அதுமட்டுமல்ல, அப்பொழுது தான் வயதுக்கு வந்த 11 வயது சிறுமியாக இருந்தாலும் சரி 45 வயது பெண்மணியாக இருந்தாலும் சரி வெயில் மழை என எல்லாக் காலத்திலும் மேற்கூரைகளோ தடுப்புகளோ எதுவுமே அற்ற ஊருக்கு பொதுவான ஒரு மரத்தடியில் தான் ஒவ்வொரு மாதவிடாய் காலத்தையும் கழிக்க வேண்டும்.

வேட்டை சமூகத்தில் குழு குழுவாக காடுகளில் திரிந்த மக்கள் இரத்தத்தைக் கண்டு அஞ்சி நடுங்கினர். மாதவிடாயின் போது பெண்ணிற்கு ஏற்படும் இரத்தப்போக்கின் வாடையை நுகர்ந்து கொடியக் காட்டு விலங்குகள் வந்து விட்டால் மொத்த குழுவிற்கும் சேதம் ஏற்படும். அதனால் குழுவைக் காப்பாற்றுவதற்காக மாதவிடாயிலிருக்கும் ஒரு பெண்ணை மட்டும் விலங்குகளுக்கு பலியிடுவது பரவாயில்லை என அந்தப் பெண்ணைக் குழுவை விட்டு மிக தூரத்தில் காட்டில் தனியே விட்டுவிடுவார்கள். அந்தப் பெண் எந்த மிருகத்தாலும் தாக்கப்படாமல் தப்பிப் பிழைத்து மீண்டு வந்தால் அடுத்த மாதவிடாய் வருவதற்கான ஒரு மாத காலம்வரை மீண்டும் குடும்பத்துடன் வாழ முடியும். பின்னர் மீண்டும் அடுத்த மாதம் இரத்தப் போக்குடன் தனியே சாவை எதிர்கொள்ளக் காத்திருக்க வேண்டும்.

முறத்தால் புலியை விரட்டிய வீரமங்கை என்று நமது பழம் பெண்டீரைப் பற்றிய வீரக்கதையைக் கேட்டு பெண்கள் அனைவருமே புழகாங்கிதம் அடைந்திருக்கிறோம். ஆனால் புலி ஏன் நாட்டுக்குள்ளும் வீட்டுக்குள்ளும் வரப்போகிறது. இப்படி தனித்து விடப்படும் பெண்கள் உயிர் பிழைப்பதற்காகப் போரடித்தானே ஆக வேண்டும். முறத்தால் புலியை விரட்டினாள் பெண் என்ற பெருமையின் பின்னால் பெண்களை தனித்துக் காட்டில் விட்ட கொடுமை மறைந்துகிடக்கிறது.

வேட்டை சமூகத்தில் மாதவிடாயின் போது பெண்கள் தனித்து விடப்பட்டதற்கு ஒரு மக்கள் குழுவை காப்பாற்றும் முயற்சி என்ற சிறு நியாயமாவது இருந்தது. ஆனால் இன்றும் கம்மாபட்டி போன்ற கிராமங்களில் மக்கள் அனுசரிக்கும் இந்த நடைமுறைக்கு எந்த நியாயத்தை நாம் காரணமாக ஒப்புக் கொள்வது.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ஜக்கம்மாவாக சின்ன ஜக்கம்மா, பெரிய ஜக்கம்மா, வீர ஜக்கம்மா என்று இந்தக் கிராமம் முழுவதுமே விதவிதமான

வேட்டை சமூகத்தில் மாதவிடாயின் போது பெண்கள் தனித்து விடப்பட்டதற்கு ஒரு மக்கள் குழுவை காப்பாற்றும் முயற்சி என்ற சிறு நியாயமாவது இருந்தது. ஆனால் இன்றும் கம்மாபட்டி போன்ற கிராமங்களில் மக்கள் அனுசரிக்கும் இந்த நடைமுறைக்கு எந்த நியாயத்தை நாம் காரணமாக ஒப்புக் கொள்வது.

ஜக்கம்மாக்களால் தான் நிறைந்து கிடக்கிறது. இந்த ஜக்கம்மாக்களை ஒவ்வொரு மாதவிடாயின் போதும் நடுத்தெருவில் விடச்சொல்லி உத்தரவு போட்டது வேறு யாருமல்ல இவர்களின் குலதெய்வமான ஜக்கம்மா தேவிதான்..

ஒவ்வொரு மாதமும் பெண்ணிற்கு ஏற்படும் இரத்த ஒழுகலைக் கண்டு பயந்து போனான் ஆதிமனிதன். ஆணின் உடலில் இருந்து இரத்தம் வெளியேறினால் அவன் இறந்து போவான். ஆனால் பெண்ணின் யோனியிலிருந்து அவ்வளவு இரத்தம் வழிந்த பின்னும் அவள் உயிரோடு இருப்பது மட்டுமல்லாமல் பிள்ளைகளையும் பெற்றுக் கொடுப்பவளாக இருக்கிறாளே என்ற அதிசயத்தில் மிரண்டு போய்தான், பெண்ணைத் தெய்வமாக வழிபட ஆரம்பித்தான்.

ஆனால் காலம் செல்லச் செல்ல பெண்ணில் எதைக்கண்டு அச்சப்பட்டும் அதிசயத்தும் பெண்ணை தெய்வமாக்கினானோ அதே தெய்வத்தின் பெயரால் அவளை அடிமையாகவும் வைத்திருக்கக் கற்றுக்கொண்டான் ஆண்.

ஆதி காலத்திலிருந்து இப்போதைய கம்மாப்பட்டி காலம் வரையிலுமே பெண்கள் மாதவிடாயின் போது வெளியேறும் குருதியின் நசநசப்பு, அடிவயிற்றில் மின்னல் போல் தெரிக்கும் வலி, இழுத்துப் பிடிக்கும் தசை வலி, துவண்டு போகும் தொடைகள் சோர்ந்து போன உடல் என அத்தனை உடல் உபாதைகளோடு தனிமை, இருள், வெயில், மழை, இடி, மின்னல், மிருகங்கள், மனிதர்கள் என அத்தனை காரணிகளையும் தைரியமாக தாங்கி சமாளித்து பெற்றுப் போட்ட பிள்ளைகள் தான் இன்றைய மக்கள் சமூகமாக வாழ்ந்து கிடக்கிறோம்.



இவ்வளவு தைரியமான பெண்களுக்கு புத்திசாலித்தனம் மட்டும் இல்லாமல் போகுமா என்ன. புத்திசாலித்தனம் இல்லாத வெறும் வீரத்தில் மட்டுமா பெண்கள் பிழைத்துக்கிடந்து சமூகத்தையும் மீட்டுக் கொடுக்கிறார்கள்.

மனிதர்கள் வேட்டை சமூகமாக இருந்து சிறு இனக் குழுக்களாக வாழ்ந்து பின்னர் விவசாய குழுக்களாக ஓரிடத்தில் நிலைத்து வாழ ஆரம்பித்தனர். அக்கால கட்டத்தில் விவசாயத்தைக் கண்டு பிடித்து வாழ்க்கையை அச்சமின்றி ஒரே இடத்தில் நிலைத்து வாழ வழிசெய்த பெண்களை போற்றும் விதமாக, பெண் குழந்தைகள் முதல் முறையாக பூப்பெய்தும் பொழுது ஏற்படும் இரத்த ஒழுக்கை செழுமையின் சின்னமாகக் கருதி வயல்களில் தெளித்தனர் என பேராசிரியர் ஆய்வாளர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள் தனது மந்திரமும் சடங்குகளும் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

விவசாய சிறுகுடிகள் பின்னர் பேரரசாக மாற ஆரம்பித்த பொழுது மதமும் குடும்ப அமைப்பும் பேரரசுகளுக்கு மிக முக்கியத் தேவையாக இருந்தது. குடும்ப அமைப்பு கட்டுக்குலையாமல் இருந்தால் தான் மக்களை ஒரு கட்டுக்குள் வைத்து பேரரசுகள் ஆள முடியும்.

அப்படிக் குடும்பம் குடும்பமாக மக்களைக் கட்டுக்குள் வைப்பதற்கு மதத்தை மிக முக்கியமான ஆயுதமாக பயன்படுத்தினர். வெகு ஜன மக்களின் அன்றாட செயல்பாடுகளிலிருந்து அனைத்து செயல்பாடுகளும் உணவு, உடை, இருப்பிடம், திருவிழாக்கள் என் அனைத்தும் மதத்துடனும் தெய்வங்களுடனும் பிணைக்கப்பட்ட வாழ்க்கை முறையை வரையறை செய்தன பேரரசுகள்.

அப்படிப்பட்ட குடும்பம் என்னும் முக்கியமான கன்னி உடையாமல் இருப்பதற்கு ஒவ்வொரு மாதவிடாய் காலத்திலும் குழந்தைப் பிறப்பின் போதும் காட்டுக்குள் தைரியமாய்த் தனித்துப் பிழைத்துக்கிடந்த முதன்முதலில் விவசாயத்தைக் கண்டு பிடித்த மதியூகம் நிறைந்த தனித்து இயங்கும் தைரியம் படைத்த பெண்ணை, அவள் தனித்து இயங்க விடாமல் கட்டுப்படுத்துவதற்கு மதத்தின் பெயரையும் தெய்வத்தின் பெயரையும் உபயோகப்படுத்த ஆரம்பித்தனர். பெண்ணின் தனித்தன்மையைக் குலைத்து அவள் தன் உடலையும் தன் உடலின் செயல்பாடுகளையும் இழிவாக தீட்டாக எண்ணுவதற்கு மாதவிடாயை ஒரு முக்கிய காரணியாக பயன்படுத்த ஆரம்பித்தனர்.

மாதவிடாய் என்பது மதத்தின் வழியில் அதன் பார்வையில் தான் இன்று பார்க்கப்படுகிறது. மாதவிடாய் என்றால் அசுத்தம் என்று மதம் கூறுகிறது. அந்த நாட்களில் கோயிலுக்குள் வரக்கூடாது. வேறு எந்த புனித நிகழ்வுகளிலும் கலந்து கொள்வதோ அது சம்பந்தப்பட்ட பொருட்களை தொடுவதோ கூடாது என்று வரையறுத்து வைத்திருக்கின்றனர். சில சமூகங்களில் மாதவிடாயின் பொழுது சமையல் கூட செய்யக் கூடாது என்று அசுத்தத்தின் சின்னமாக பெண்கள் பார்க்கப்படுகிறார்கள். அந்த மாதிரி ஒதுக்கி வைக்கப்படும் பெண்கள் ஒரு தண்டனைக் கைதியைப் போன்ற குறைந்தபட்ச வசதிகளுடன் மட்டும் தான் அந்த நாட்களைக் கடக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

பெண்களின் மாதவிடாயைப் பற்றி தமிழ் இலக்கியத்தில் முதன்முறையாக குறிப்பிடப்பட்ட பாடலை எழுதியவர் சங்கப்புலவர் பொன்முடியார். புறநானூற்றின் பாடல் எண் 299 இல் “கலந்தொடா மகளிர்..”. என்னும் பாடலில் மாதவிடாய் காலத்தில் பெண்கள் முருகன் கோவிலுக்குள் அனுமதிக்கப்படாமல் விலக்கி வைக்கப்பட்டதை வேறு ஒரு நிகழ்வுக்கு ஒப்புமையாகக் கூறுகிறார் இவர். இவ்வாறு பல நூறு ஆண்டுகளாக, சில ஆயிரம் வருடங்களாகத் பல முறை பல விதமாகத் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டு இன்று மாதவிடாய் என்றாலே அது தீட்டு என்று பெண்ணே

பெண்ணிற்கு போதிக்கும் சமூகமாக உருமாறி இருக்கிறோம் இன்றைய நமது சமூகம். மாதவிடாய் என்றால் தீட்டு "இழிவு" என்ற எண்ணம் ஆழமாக வேரூன்றி இருப்பதால் தான் அந்த சமயத்தில் பெண்ணிற்கு ஏற்படும் உடல் உபாதைகளும் அலட்சியப்படுத்தப்படுகின்றன.



ஆதிப்பெண் தனது மாதவிடாய் காலங்களில் தான் உயிர் வாழ்வதற்காக வன விலங்குகளுடன் போராடினாள். படித்து வேலைக்கு செல்லும் பெண்ணாக இருந்தாலும் சரி படிக்காத கூலி வேலை செய்யும் பெண்களாக இருந்தாலும் சரி இன்றைய பெண்ணும் மாதவிடாய் காலத்தில் பல உடல் உபாதைகளுடன் தனது குடும்பத்தினருக்காகப் போராடிக்கொண்டு தான் இருக்கிறாள். அந்த நேரங்களில் ஏற்படும் உடல் உபாதைகளுக்காக விடுப்பு எடுக்கும் பொழுது, அமைப்புசாரா நிறுவனங்கள் மற்றும் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்யும் பெண்களின் பொருளாதாரம் மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறது. தீட்டு என்று புனிதங்களிலிருந்து ஒதுக்கி வைக்கும் பெண்ணை பொருளாதார நெருக்கடிகளுக்காக உழைப்பதிலிருந்து யாரும் விலக்குக் கொடுப்பதில்லை.

பின் தங்கிய மாநிலங்களில் ஒன்றாக அறியப்படும் பீகாரில் இந்தியாவிலேயே முதல்முறையாக 1992இல் அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களுக்கு மாதவிடாயின் பொழுது சம்பளத்துடன் கூடிய விடுமுறையை அன்றைய முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் அமல்படுத்தினார். ஐந்து பெண் குழந்தைகளுக்கு தந்தையான லல்லு பிரசாத் யாதவ் தனது மாநிலப் பெண்கள் அனைவருக்கும் தந்தையாக மாறிய தருணம் அது. அதன் பின்னர் இத்தனை ஆண்டுகளில் இன்று வரை கேரளாவைத் தவிர வேறு எந்த மாநிலங்களிலும் இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

பெண்களுக்குக் கிட்டத்தட்ட 45 இல் இருந்து 55 வயதுக்குள் மாதவிடாய் நிற்கும் மெனோபாஸ் காலகட்டத்தின் முன்னும் பின்னுமாக இரண்டு வருடகாலம் வரை ஏற்படும் மன அழுத்தம் மற்றும் உடல் உபாதைகளைப் பற்றிய விரிவான புரிதலை ஏற்படுத்த வேண்டியது மிகஅவசியம். எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி மிக தைரியமானவர். வேலைக்கு போகாத கணவரையும் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு தனி ஆளாகக் குடும்பத்தை தூக்கி நிறுத்தியவர். ஆனால் அவர் தனது மெனோபாஸ் காலகட்டத்தில் ஒரு குழந்தையைப் போன்ற பயந்த மனநிலையோடு ஒவ்வொரு செயலுக்கும் இன்னொரு வரை துணைக்கு அழைப்பவராக, சின்ன விஷயத்திற்கெல்லாம் கோபப்படுபவராக, தூக்கமின்மையால் அவதிப்படுபவராக மாறிப்போனார். அவர் நன்றாகப் படிக்க வைத்த அவரது குழந்தைகள் அவரை மனநல மருத்துவரிடம் அழைத்துச் சென்று முறையான மருத்துவ வழிகாட்டுதலுடன் அவரைப் பாதுகாத்து அந்த காலகட்டத்தை அந்தப் பெண்மணி நலமுடன் கடக்க உறுதுணையாக இருந்தனர்.

ஆனால் பல குடும்பங்களில் பெண்ணின் மெனோபாஸ் காலகட்ட பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளாமல் சண்டையும் சச்சரவுகளும் அந்தப் பெண்ணின் மீதான குறை சொல்லலும் அதிகரிக்கத் தொடங்கும். இந்திய குடும்பங்களில் பெண்களின் அந்தக் காலகட்டத்தில் தான் வீடுகளில் நிறைய திருமணங்கள் மற்றும் அடுத்தத் தலைமுறையினருக்கான பிரசவங்கள் என பொறுப்புகளும் வேலைப்பளுவும் அதிகமாக இருக்கும். ஏற்கனவே பாதிப்பில் இருக்கும் பெண்மணிக்கு உடலும் உள்ளமும் துவண்டு கிடக்கும் பொழுது, அதுவரை அவர் மூலம் சலுகைகளை அனுபவித்து வந்த கணவர் குழந்தைகள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் அனைவரும் இப்பொழுது அந்தப் பெண்மணியின் மீது குற்றம் சுமத்தத் தொடங்குவார்கள். அந்தப் பெண்மணி சொல்ல முடியாத மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி தனியாகவே அந்த காலகட்டத்தை கடக்க வேண்டிய ஆதி காலத்திற்கு செல்ல வேண்டியதாயிருக்கும்.

பெண்களின் வலியைப் பற்றியப் புரிதலை முதலில் பெண்களிடமிருந்தே ஆரம்பிப்பதுதான் சரி. பெண்கள் தங்கள் உடலில் நடக்கும் நிகழ்வை அறிவியல் பூர்வமாகப் புரிந்து கொண்டால் அதனால் அவளுக்கு நிகழ்த்தப்படும் பிரச்சனைகளை அவளால் எளிதில் கையாளமுடியும். அதே நேரத்தில் ஆண் குழந்தைகளுக்கும் சம அளவில் இதைப் பற்றிய புரிதலை ஏற்படுத்துவது மிக அவசியமான செயல்பாடாகும்.

குடும்பங்களில் பெண்ணின் மெனோபாஸ் காலகட்ட பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளாமல் சண்டையும் சச்சரவுகளும் அந்தப் பெண்ணின் மீதான குறை சொல்லலும் அதிகரிக்கத் தொடங்கும்.

நான் கல்லூரி முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் பொழுது எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த எனது தம்பி "அக்கா எனது நண்பர்கள் எல்லோரும் பெண்களுக்கு ஆடைகளில் சிவப்பாகப்படும் கறையைப் பற்றி அதிகமாகப் பேசிபெண்களைக் கிண்டல் பண்ணுகிறார்கள். அது என்ன அக்கா..? உனது உடையிலும்சிவப்பு நிறம் படுமா..? ஏன்..? அது என்ன..?"

என்று கேட்டான். நான் கூச்சப்படாமல் அவனை அருகில் அழைத்து ஒரு நோட்டுப் புத்தகத்தில் படம் வரைந்து விளக்கமாக கூற ஆரம்பித்தேன்..

பெண்களுக்கு இரு சினைப் பைகள் இருக்கின்றன. அந்த சினைப் பைகளில் நூற்றுக்கணக்கான சிறுசிறு கருமுட்டைகள் உண்டாகும். அவை ஹார்மோன்களின் செயல்பாடுகளால் வளரும். அவற்றில் ஒன்று மட்டும் சரியான அளவில் வளர்ந்து சுழற்சியின் பதின்மூன்றாம் நாளன்று சினைப்பையை விட்டு வெளியேறி கர்ப்பப் பையை நோக்கி நகரும். அப்படி கர்ப்பப்பையை வந்தடையும் கரு முட்டையுடன் ஆணின்

விந்து இணையும் பொழுது கருவாக உருக்கொள்கிறது. அந்தக் கரு பாதுகாப்பாக வளர்வதற்கு ஏதுவாக கர்ப்பப்பையின் சுவரிலும் மாற்றங்கள் ஏற்படும். இந்த இணைதல் 24–48 மணி நேரத்தில் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த கருமுட்டை செயலிழந்து விடும். சரியாக இருபத்து எட்டாம் நாளில் அந்த செயலிழந்த கருமுட்டை சிதைந்து கர்ப்பப்பை வழியாக வெளியே வரும். அவ்வாறு வரும்போது கர்ப்பப்பையின் சுவரில் ஏற்பட்ட திசுக்களும் சிதைந்து இரத்தக்கசிவாக வெளிவரும். இதுதான் பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் என்றழைக்கப்படும் மாதசுழற்சி ஆகும்.”

“பொதுவாக 3–5 நாட்கள் மாதவிடாய் ஆகும். இந்த சமயங்களில் தாங்கமுடியாத வயிற்றுவலி, தசைப்பிடிப்பு மற்றும் அதீத உடல்சோர்வினால் கிட்டத்தட்ட 39% பெண்கள் பாதிப்படைகின்றனர்” என்று விளக்கமாகக் கூறினேன். கேட்டுவிட்டு அவனும் ஓடிப் போய் விட்டான்.

அவனுக்கு திருமணவயது வந்த பொழுது மீண்டும் ஒருமுறை வந்து

“அக்கா எனது வட இந்திய நண்பன் ஒருவனுக்கு திருமணமாகி 20 நாட்கள் தான் ஆகின்றது. ஆனால் அவன் மனைவி 35 நாள் கர்ப்பமாக இருக்கிறாள். அதனால் அவனும் அவனது குடும்பத்தினரும் அந்தப் பெண்ணை சந்தேகப்பட்டு அவளது பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். விவாகரத்துக்கும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றனர். மருத்துவர் இந்தத் திருமணத்தில் இந்த கர்ப்பம் சாத்தியம் தான் என்று கூறியிருக்கிறார். ஆனால் நண்பனது வீட்டு பெரியவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர். இதில் என்ன பிரச்சனை இருக்கிறது அக்கா..?”

நான் மீண்டும் அவனிடம் அவனது 13 வயதில் கூறிய மாதவிடாய் சுழற்சியை பற்றிக்கூறி.. “அந்தப் பெண் மாதவிடாய் வந்து 15 நாட்களில் அவளுக்குத் திருமணம் நடந்திருக்கும். அந்த காலகட்டம் அவனது கருமுட்டை கர்ப்பத்திற்கு தயாராக இருக்கும் காலகட்டமாகும். அவள் உடனே கர்ப்பம் அடைந்து இருப்பாள். ஆனால் மருத்துவர்கள் கர்ப்ப காலத்தை அவளுக்கு கடைசியாக வந்த மாதவிடாயின் முதல் தேதியிலிருந்து தான் கணக்கெடுப்பார்கள். திருமணத்திற்கு முன்பு 15 நாட்களுக்கு முன்பு அவளது கடைசி மாதவிடாய் ஏற்பட்டு இருக்கும். அந்தத் தேதியிலிருந்து பார்த்தால் 35 நாட்கள் என்று கணக்கு வரும். ஆனால் சரியாக கடைசி மாதவிடாயிலிருந்து 15 வது நாளில் திருமணம் ஆன முதல் வாரத்தில்தான் அறிவியல் முறைப்படி அவள் கர்ப்பம் அடைந்திருக்க முடியும். அந்தப் பெண்ணின் கர்ப்பத்திற்கு அவளது திருமணம் மூலம் அவளது கணவருடன் ஏற்பட்ட தாம்பத்திய உறவு மட்டும்தான் காரணமாக இருக்க முடியும்” என்று தம்பிக்கு விளக்கமாகக் கூறினேன். எனது தம்பி 13 வயதில் கூறாத நன்றியை அன்று எனக்குக் கூறினான்.

“அக்கா எனது வயதுப் பையன்கள் அனைவரும் பெண்களை, சக பெண் தோழிகளை கிண்டல் செய்து கொண்டிருக்கும் பொழுது என்னால் அந்தப் பெண்களை அவர்களின் வலிகளைப் புரிந்து கொள்ள முடிந்தது. இதுவரை நான் எந்தப் பெண்ணையும் உடல் ரீதியாகக் கிண்டல் செய்ததோ தவறாக எண்ணியதோ கிடையாது. அதற்கு உன்னிடமிருந்து சரியான வயதில் சரியான முறையில் எனக்கு கிடைத்த விளக்கம்தான் முக்கியமான காரணம். அப்பொழுது நன்றி சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை. இப்பொழுது சொல்லத் தோன்றுகிறது. நீ இவ்வளவு விளக்கமாக கூறவில்லை என்றால் நானும் மற்ற பையன்களைப் போல் மேலும் அந்த எனது நண்பனைப் போல் ஒரு பெண்ணையோ பல பெண்களையோ கிண்டலும் வேலையும் செய்து சந்தேகப்படும் முட்டாளாக இருந்திருப்பேன். நன்றி அக்கா”.

வீட்டில் தனது தாயிடமிருந்தும் சகோதரியிடமிருந்தும் மாதவிடாயைப் பற்றி சரியான புரிதல் கிடைக்கும் ஆனால் தான் வெளி உலகில் மட்டுமல்ல வீட்டில் உள்ள பெண்களையும் நல்ல புரிதலுடன் எதிர் கொள்ள முடியும். மும்பை அருகே உள்ள உல்லாஸ் என்ற நகரத்தில் வசிக்கும் சுமித் என்ற திருமணமான இளைஞர் தனது 12 வயது சகோதரி முதல்முறையாக பூப்பெய்தியதால் அவரது ஆடையில் இருந்த இரத்தக் கறையைக்கண்டு அவள் கன்னித்தன்மையை இழந்ததனால் ஏற்பட்ட இரத்தக்கறை என்று சந்தேகப்பட்டு அடித்தே கொன்ற கொடூரங்கள் நிகழாமலும் தவிர்க்க முடியும்.



கூச்சத்தையும் அச்சத்தையும் தொலைத்து மாதவிடாயை கம்பீரமாக பெரு மிதமாக எதிர்கொள்வோம் தோழிகளே. ●

வீட்டில் தனது தாயிடமிருந்தும் சகோதரியிடமிருந்தும் மாதவிடாயைப் பற்றி சரியான புரிதல் கிடைக்கும் ஆனால் தான் வெளி உலகில் மட்டுமல்ல வீட்டில் உள்ள பெண்களையும் நல்ல புரிதலுடன் எதிர் கொள்ள முடியும்.

நன்றி

புழுதி இணைய இதழ்

மாதவிடாய் சிறப்பிதழ்

சுதந்திரம் ! சமத்துவம் !! சகோதரத்துவம் !!!

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா
வெள்ளாளகொல்லை ரவி திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டதை
சந்தேகத்திற்குரிய மரணமாக திசை திருப்பும் காவல்துறையின் போக்கை கண்டித்தும்,
கொலை வழக்காக பதிவு செய்து குற்றவாளிகளை கைது செய்யக் கோரியும்

# கண்டன ஆர்ப்பாட்டம்

நாள் : 25.07.2023 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி
இடம் : சின்னப்பா பூங்கா, புதுக்கோட்டை.
























தர்மபுரி மாவட்டம், நாயக்கன்கொட்டாயில் 2023 செப்டம்பர் 12 ஆம் நாள் தியாகிகள் நினைவு நாளில் தோழர்கள் அப்பு, பாலனுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.






# தமிழர் மறுமலர்ச்சிக்குவித்திட்ட வள்ளலார்









# ஆறாம் திருமுறை இருட்டடிக்கப்படுவது ஏன்?